
சோதனையில் அறிய வேண்டிய

# நான்கு சத்தியங்கள்



ப. சாம் ஜெபத்துரை

# சோதனையில் அறிய வேண்டிய நான்கு சத்தியங்கள்!

J. சாம் ஜெபத்துரை

வெளியீட்டாளர்

J. சாம் ஜெபத்துரை

[illegible]

[illegible] சென்னை - 600 024.

முதற் பதிப்பு : மார்ச் 1999
நன்கொடை ரூ. 10/-
வெளியீடு எண் : 729

## பொருளடக்கம்

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | சோதனையில் அறிய வேண்டிய நான்கு சத்தியங்கள்! | 3 |
| 2. | இயேசுகிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள்! | 12 |
| 3. | ஜெயங் கொண்ட பரிசுத்தவான்களை கவனித்துப் பாருங்கள்! | 25 |
| 4. | உங்களையே சோதித்துப் பாருங்கள்! | 35 |
| 5. | பரலோகத்தை நோக்கிப் பாருங்கள்! | 41 |

அச்சிட்டோர் :
ஓரேப் ஆர்ட் பிரிண்டர்ஸ்
50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

அத்தியாயம்
1

# சோதனையில் அறிய வேண்டிய நான்கு சத்தியங்கள்!

**''எங்களை சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்'' (மத். 6:13).**

நம் அருமை ஆண்டவருடைய ஜெபத்தை இங்கே நாம் வாசிக்கிறோம். அவர் நமக்கு கற்றுக்கொடுத்த ஜெபம் என்ன? **''எங்களை சோதனைக்கு உட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்!''** ஆம், ஒவ்வொருநாளும் ஆவியோடும், உண்மையோடும் இந்த ஜெபத்தை கர்த்தரிடத்தில் ஏறெடுக்க வேண்டும். அப்பொழுது சோதனை நேரங்களிலே கர்த்தருடைய கிருபை நம்மைக் காத்துக்கொள்ளும்.

நாம் சோதனைகளும், பாடுகளும், உபத்திரவங்களும் நிறைந்த உலகத்தில் வாழ்கிறோம். எல்லாப் பக்கங்களிலும் நம்முடைய கால்களுக்கு கண்ணிகளும், கண்களுக்கு வலைகளும், சத்துருவினுடைய சதிகளும் நிறைந்து காணப்படுகின்றன.

மனவேதனை, உள்ள வியாகுலம், சஞ்சலங்கள், உபத்திரவங்கள் நம்மைத் தாக்குகின்றன. எந்த இடத்திலிருந்து எந்தவிதமான சோதனை எப்பொழுது வரும் என்று நமக்குத் தெரிவதில்லை. எதிர்பாராத இடத்திலிருந்து திடீரென்று சோதனை நம்மை நோக்கி வருகின்றன.

ஆனாலும், ஆண்டவர் நம்மைத் திடப்படுத்தி சொல்லுகிறார், **''உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு. ஆனாலும், திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்''** (யோவா. 16:33).

சோதனை என்பது என்ன? அதுதான் நம்முடைய நேரான பாதையை திசை திருப்புவதற்கு சாத்தான் எடுக்கிற முயற்சி. கர்த்தர் மேல் வைத்திருக்கிற அன்பை விட்டு உலகத்தின் ஆசை இச்சைகளை நோக்கி திருப்புவதற்கு சத்துரு கொண்டு வருகிற

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

உடனே, அவர் அதற்கு மறுமொழியாக நீ லஞ்சம் வாங்காமல் இருக்கலாம். ஆனால், அன்பளிப்புகளை ஏற்றுக்கொள்ளலாமே, தவறான வழியில் பணம் சேகரித்தால் அது லஞ்சமாகும். நீ நியாயமாக மற்றவர்களுக்கு உதவி செய்து அவர்கள் உனக்கு மகிழ்ச்சியோடு அன்பளிப்பாக கொடுக்கிறது லஞ்சமல்ல. அதை நீ வாங்கி எவ்வளவோ விதவைகளுக்கு துணிமணி, பொருட்கள் வாங்கிக்கொடுக்கலாமே என்றார். அவர் சாதுரியமாக பேசிய வார்த்தைகள் அன்று எனக்கு நியாயம் போல் பட்டது.

ஆகவே, அன்றைக்கு ஒரு செல்வந்தன் எனக்குக் கொடுத்த பெரிய தொகையை அன்பளிப்பாக பெற்றுக்கொண்டேன். அன்றிலிருந்து யாராவது வந்து நான் கேட்காமலேயே சந்தோஷமாய் கொடுத்தால் அதை வாங்கி ஒரு கவரிலே போட்டு வைப்பேன். அதைக் கொண்டுவந்து என் தாயாரிடம் கொடுத்து, ''அம்மா, இந்தப் பணத்தை எந்தவிதத்திலும் வீட்டு செலவுக்கு பயன்படுத்த வேண்டாம். கிறிஸ்மஸ் நேரங்களிலே ஏழை மக்களுக்கு உணவு கொடுப்பதற்கோ, விதவைகளுக்கு துணி வாங்கிக் கொடுப்பதற்கோ மாத்திரம் பயன்படுத்துங்கள்'' என்று சொன்னேன்.

ஆனால், அந்த இரவு ஆண்டவர் என் தாயை கடுமையாய் எச்சரித்தார். ''நீ ஏழைகளுக்கு தானதர்மம் செய்ய வேண்டுமானால் உனக்கு உண்டானவைகளை விற்று தரித்திரருக்குக் கொடு'' என்று தெளிவாய் பேசினார். ஆகவே நான் வாங்கின பணத்தை எல்லாம் யாரிடம் பெற்றுக்கொண்டேனோ அவர்களிடத்திலே மன்னிப்பு கேட்டு திருப்பிக்கொடுத்தேன். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் என் உள்ளத்தை நிரம்பி வழியச் செய்தது. பதினாறு ஆண்டுகள் அந்த அலுவலகத்திலே வேலை செய்தபோதிலும் என் கைகளை கறைபடாமல் கர்த்தர் பாதுகாத்துக் கொண்டார்.

அப்.பவுல் மிகத் தெளிவாய் எழுதுகிறார், ''**பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள்**'' (எபே. 4:27). நாம் கொஞ்சம் இடம் கொடுத்தாலே அவன் உள்ளே நுழைந்து ஆக்கிரமிப்புச் செய்துவிடுவான். இன்னும் அதிகமான சோதனைகளுக்குள்ளே, தாக்குதலுக்குள்ளே வழி நடத்தி விடுவான்.

நாம் எதிலே பெருமைப்படுகிறோமோ அதிலே சாத்தான் சோதனையைக் கொண்டு வருவான். ஒருவேளை நம்முடைய தாழ்மையைக் குறித்து நான் எவ்வளவு தாழ்மையுள்ளவனாய் இருக்கிறேன் என்று எண்ணும்போதே அதில் பெருமையைக் கொண்டு வந்து விடுவான். நான் எவ்வளவு பரிசுத்தமாய் இருக்கிறேன் என்று நினைக்கும்போதே அதிலே ஒரு சோதனையைக் கொண்டுவந்து விடுவான். ஆகவே, நாம் சாத்தானுக்கு எள்ளளவத்தில்கூட இடம் கொடுத்துவிடவேக்கூடாது.

வனாந்தரமான ஒரு பாலைவனத்திலே சென்ற வழிப்போக்கன் ஒருவன் அன்று இரவு அந்தப் பாலைவனத்திலே தங்க வேண்டியது இருந்தது. பாலைவனத்திலே சின்ன கூடாரத்தை அடித்து அதற்குள்ளே படுத்துக்கொண்டான். வெளியிலே அடித்த ஆணி முனையிலே தன் ஒட்டகத்தைக் கட்டி வைத்திருந்தான்.

இரவு வேளையில் அவன் திடீரென்று கண் விழித்துப் பார்த்த போது அந்த ஒட்டகம் மெதுவாய் அவனை நோக்கிப் பார்த்து, "நீ உள்ளே சுகமாய் படுத்துத் தூங்குகிறாய். நானோ வெளியே பனியில் நிற்கிறேன். என்னுடைய மூக்கை மாத்திரம் இந்த கூடாரத்துக்குள் வைப்பதற்கு கொஞ்சம் இடம் கொடுப்பாயா?" என்று பரிதாபமாய் கேட்டது.

சரி, மூக்குதானே? வைத்துவிட்டுப் போகட்டும் என்று இடம் கொடுத்தான். ஆனால், பத்து நிமிட நேரத்துக்குள்ளாக அது தன்னுடைய தலையை உள்ளே நீட்டிவிட்டது. பரிதாபப்பட்டு பொறுத்துக்கொண்டான். இன்னும் ஒரு மணி நேரமானது. மெதுவாய் தன்னுடைய இரண்டு முன்னங்கால்களையும் கூடாரத்துக்குள் எடுத்து வைத்தது.

கடைசியில் என்ன செய்தது தெரியுமா? முழு கூடாரத்தையும் ஆக்கிரமித்துக்கொண்டு அந்த மனிதனை காலால் எட்டி உதைத்து வெளியே தள்ளினது. அப்பொழுதுதான் அவன் தன்னுடைய பரிதாபமான நிலைமையை உணர்ந்தான். கொஞ்சம் இடம் கொடுத்தது முடிவிலே தவறாய்ப் போய்விட்டதே என்று எண்ணினான். ஆகவே, நாம் பிசாசுக்கு சிறிதும் இடம் கொடுத்து விடக் கூடாது.

குழந்தை இல்லாமல் இருந்த ஆபிரகாமுக்கு ஒரு நாள் சாராள் கொடுத்த ஆலோசனை சிறந்ததாய் தோன்றியது. ஆகார் என்ற அடிமைப் பெண்ணின் மூலமாக சந்ததியை உருவாக்குவோம் என்பதே அவளுடைய ஆலோசனை.

ஆனால், ஆபிரகாமோ அது தேவனுடைய சித்தமா? என்று தெரிந்துகொள்ளவில்லை! கர்த்தரிடத்திலே ஆலோசனை கேட்க வில்லை. அந்த சோதனையில் விழுந்ததின் விளைவாக அவருக்கு இஸ்மவேல் பிறந்தான். மாம்சத்தின்படியான சந்ததி யாக விளங்கியது!

பிற்பாடு ஆபிரகாமுக்கு ஆவிக்குரிய சந்ததியாக ஈசாக்கு பிறந்தபோது இஸ்மவேலுக்கும், ஈசாக்குக்கும் போராட்டம் எழுந்தது. இன்று வரையிலும் அது பெரிய யுத்தமாக நடந்து கொண்டே இருக்கிறது. இஸ்ரேல் தேசத்துக்கும் அதைச் சூழ உள்ள 14 அரபு தேசங்களுக்கும் இடையிலே நடந்து வருகிற சண்டைக்கு மூலகாரணம் அன்றைக்கு ஆபிரகாம் சோதனைக்கு இடம் கொடுத்ததுதான்.

ஆகவேதான், இயேசுகிறிஸ்து **''சோதனைக்கு உட்படப் பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்''** (மத். 6:13) என்று ஜெபிக்கும்படி சொன்னார். மட்டுமல்ல, கெத் செமனே தோட்டத்திலே அவர் சீஷர்களைப் பார்த்து, **''நீங்கள் நித்திரை பண்ணுகிறது என்ன? சோதனைக்கு உட்படாதபடிக்கு எழுந்திருந்து ஜெபம் பண்ணுங்கள் என்றார்''** (லூக். 22:46).

சாத்தானுக்கு கொஞ்சம் இடம் கொடுத்ததினால் ஏற்படும் விளைவைக் குறித்து ஒரு பழங்காலத்து கதை ஒன்று உண்டு. ஒருவர் பேப்பரிலே வந்த விளம்பரம் ஒன்றைப் பார்த்தார். அதிலே இருபது லட்சம் பெறுமான வீடு ஒன்றை ஒரு லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது. பேப்பரை வாசித்தவருக்கு பெரிய சந்தோஷம்!

உடனே அந்த விளம்பரதாரர் வீட்டை நோக்கி ஓடினார். அது ஒரு தனி பங்களா. பழங்காலத்து வீடாய் இருந்தாலும் மிக அழகாய் இருந்தது. அவரிடத்திலே போய், ''ஐயா, இந்த வீட்டை நானே வாங்கிக் கொள்ளுகிறேன். எனக்கே நீங்கள் விற்கவேண்டும்'' என்று வலியுறுத்தினார்.

அந்த வீட்டிலே இருந்த பெரியவர் அன்போடு சொன்னார். நான் இந்த வீட்டில் 45 வருடமாய் வாழ்ந்து வருகிறேன். எனக்கு மனைவி, பிள்ளைகள் கிடையாது. எனக்கு வயதாகிவிட்டது. நான் முதியோர் இல்லத்திலே போய் சேர்ந்து விடப்போகிறேன். ஆகவேதான் இந்த வீட்டை குறைந்த விலைக்கு விற்க முடிவு செய்தேன்.

ஆனாலும், ஒரு நிபந்தனை உண்டு. இந்த வீட்டில் நான் வாழ்ந்ததற்கு அடையாளமாக எனக்குச் சொந்தமாக ஆணி அடிக்க ஒரு இடம் வேண்டும். நான் எப்பொழுது வந்தாலும் எனக்குச் சொந்தமான அந்த ஆணியைப் பார்க்க உரிமை வேண்டுமென்று சொன்னார். சரி என்று ஒப்புக்கொண்டார் வாங்க வந்தவர். அப்படியே விலைக்கு வாங்கி அந்த வீட்டுக்கு குடும்பமாய் குடித்தனம் வந்துவிட்டார்.

சரியாய் ஒரு மாதம் கடந்து சென்றது. ஒரு மாலை வேளையிலே பெரியவர் வீட்டுக் கதவை தட்டிக்கொண்டு உள்ளே வந்தார். தன் ஆணியைப் பார்க்க விரும்புவதாக சொன்னார். அப்படியே தன் தொப்பியை கழற்றி ஆணியிலே மாட்டிவிட்டு ஒரு மணி நேரம் இருந்துவிட்டுப் போய் விட்டார்.

இரண்டு வாரங்கள் கழிந்தன. இரவு பத்து மணிக்கு அந்த பெரியவர் கதவைத் தட்டினார். தான் அந்த ஆணியைப் பார்க்க வேண்டுமென்று சொன்னார். வாங்கினவரோ, ''ஐயா, என் மனைவி, பிள்ளைகள் எல்லாம் அங்கே படுத்திருக்கிறார்கள். இப்பொழுது அவர்களை எழுப்ப முடியாது. நீங்கள் இன்னொரு தடவை வாருங்கள்'' என்றார்.

ஆனால், அந்தப் பெரியவரோ ஒத்துக்கொள்ளவில்லை. அந்த ஆணி எனக்குச் சொந்தமானது. எந்த நேரமும் நான் வருவேன், போவேன் என்று வீட்டுக்குள் நுழைந்தார். ஆணியைப் பார்த்தார். பின்பு ஆணியிலே தன்னுடைய குதிரையைக் கட்டி வைத்தார். காலை வரை இந்தக் குதிரை இங்குதான் இருக்கும் என்று சொன்னார். வீட்டை வாங்கினவருக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

அதன் பின்பு இரவிலும், பகலிலும் பலமுறை ஆணியைப் பார்க்க வருகிறேன் என்று சொல்லி அடிக்கடி அந்தப் பெரியவர்

வந்துக்கொண்டே இருந்தார். அவருடைய தொந்தரவு தாங்க முடியவில்லை. கடைசியிலே, வீடே வேண்டாம்போல அவருக்கு தோன்றிவிட்டது. கொஞ்சம் ஆணி அடிப்பதற்கு இடம் கொடுத்தது பெரிய தவறாய் முடிந்ததே என்றுச் சொல்லி மிகவும் வருந்தினார்.

இதுபோலத்தான் சாத்தான் வரும்போது சின்ன ஆணி அடிக்க இடம் கேட்டு வருவான். ஒரு சின்ன பாவ சிந்தனையை கொடுப்பான். சின்ன வீண் வார்த்தையைக் கொடுப்பான். பின்பு அதை வைத்து வளர்த்து வளர்த்து பெரிய சோதனைக்குள்ளே தள்ளி விடுவான். ஆகவே, அருமையான தேவனுடைய பிள்ளைகளே, சோதனைக்கு ஒருபோதும் இடம் கொடாதிருங்கள்.

இன்றைய கிறிஸ்தவர்களை மூன்று வகையாய்ப் பிரிக்கலாம். முதல் வகை கிறிஸ்தவர்கள் சோதனையைக் குறித்த எந்த எண்ணமும் இல்லாமல் சோதனையிலே விழுந்து கிடக்கிற கூட்டத்தார். சோதனையை விட்டு எழும்பவேண்டுமென்ற எண்ணமே அவர்களுக்கு இல்லை. பன்றி சேற்றை விரும்புவது போல இவர்கள் பாவ சோதனைகளை விரும்புகிறவர்கள். அதில் மூழ்கிக் கிடக்கிறவர்கள்.

இரண்டாவது வகைக் கூட்டத்தார் சோதனை நேரங்களில் தங்களுடைய சுய பெலத்தினால் அதை மேற்கொள்ள முயற்சிக்கிறவர்கள். விழுந்து, விழுந்து எழும்பிக் கொண்டிருக்கிறவர்கள். மனசாட்சி குத்தப்பட்டு வாதிக்கப்படுகிறவர்கள். இவர்கள் ஆவியிலே பெலனில்லாதவர்களாகவும், வல்லமை இல்லாதவர்களாகவும், குற்ற மனசாட்சியோடு தடுமாறிக் கொண்டிருக்கிறவர்கள்.

மூன்றாவது வகை கிறிஸ்தவர்கள் சோதனையை எதிர்த்து நிற்கிறவர்கள். பரிசுத்த ஆவியினுடைய வல்லமையினால் சோதனைக்காரனை மேற்கொள்ளுகிறவர்கள். பாவத்திலும், சோதனையிலுமிருந்து ஜெயங்கொண்டவர்கள். அப்படிப்பட்டவர்களைத்தான் பரலோகம் பார்த்து சந்தோஷப்பட்டு களிகூருகிறது.

தேவபிள்ளைகளே, நீங்கள் இதிலே எந்தக் கூட்டத்தாராய் இருக்கிறீர்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் மூன்றாம்

வகையைச் சேர்ந்தவர்களா? பரிசுத்தமான வெற்றி வாழ்க்கையின் மேல் வைராக்கியமாய் இருக்கிறவர்களா?

சோதனையை ஜெயிப்பது என்பது நாமும் ஆண்டவரும் இணைந்து மேற்கொள்ளுகிற முயற்சியாகும். நாம் பாவத்திலே விழக்கூடாது. சோதனையிலே தோல்வி அடையக்கூடாது என்ற உறுதியான தீர்மானம் உங்களுக்கு இருக்குமானால் அந்த சோதனையை சந்திக்கவும், ஜெயிக்கவும் கர்த்தர் உங்களுக்கு நிச்சயமாகவே பெலன் தருவார். உங்களுக்கு உதவிச் செய்வார். ஆம், உங்களுடைய தீர்மானமும், கர்த்தருடைய கிருபையும் ஒன்றாய் இணையும்போது சோதனையிலே பெரிய வெற்றி உண்டாகும்.

ஆனால், உங்கள் சுய பெலத்திலும், உங்கள் சுய ஞானத்திலும், உங்கள் சுய அறிவிலும் மாத்திரமே சார்ந்திருப்பீர்களானால் அந்த சோதனையை ஜெயிக்க முடியாது. மனுஷ பெலத்தால் சாத்தானை மேற்கொள்ள முடியாது. "**பிசாசின் தந்திரங்கள் நாம் அறியாதவைகள் அல்லவே**" (2கொரி. 2:11).

அப். பவுல் எழுதுகிறார், "**ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்**" (எபே. 6:13).

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, சோதனைகளை எதிர்த்து நிற்க யுத்த ஆயுதங்களை தரித்துக்கொள்ளுங்கள். தேவனுடைய ஒத்தாசையை நாடுங்கள். கிறிஸ்து இயேசுவை சார்ந்துக்கொள்ளுங்கள். அவர்தான் நமக்காக யுத்தம் செய்கிறவர். அவர்தான் சாத்தானுடைய வல்லமையை அதமாக்குகிறவர். அவனுடைய தலையை நசுக்கி ஜெயங்கொண்டவர். அவருடைய பெலத்தாலே நாம் நிச்சயமாகவே சோதனைகளை மேற்கொள்ள முடியும். அல்லேலூயா!

இந்த பகுதியிலே ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைகளும் அறிந்திருக்க வேண்டிய நான்கு முக்கியமான சத்தியங்களைக் குறித்து எழுதப் பிரியப்படுகிறேன். ஆம், நாம் ஒவ்வொருவரும் இந்த சத்தியங்களை தெளிவாக அறிந்திருக்க வேண்டும்.

**''சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்''** என்று இயேசுகிறிஸ்து சொன்னார் அல்லவா? *(யோவா. 8:32)*.

சோதனையிலிருந்து ஜெயங்கொள்ளக்கூடிய சத்தியங்களை நீங்கள் அறிந்து மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துங்கள். சோதனையில் சிக்கியிருக்கிற மக்களை விடுதலையாக்குங்கள். அவர்களுக்கு ஆலோசனை கூறுங்கள். சோதனையில் நாம் அறிந்துகொள்ளவேண்டிய முக்கியமான சத்தியங்கள் உண்டு.

**''என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சிறைப்பட்டுப் போகிறார்கள்''** என்று ஏசாயா தீர்க்கதரிசி புலம்பினார் *(ஏசா. 5:13)*. **''என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்''** என்று ஓசியா தீர்க்கதரிசி கதறினார் *(ஓசி. 4:6)*.

சத்தியத்தை அறிந்தால் விடுதலை. சத்தியத்தை அறியா விட்டால் சிறையிருப்பு! சங்காரம்! நித்திய வேதனை!

நாம் அறியவேண்டிய முதல் சத்தியம் என்ன? சோதனை நேரத்தில் -

1. இயேசுகிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள்!
2. ஜெயங்கொண்ட பரிசுத்தவான்களை கவனித்துப் பாருங்கள்!
3. உங்களை நீங்களே சோதித்துப் பாருங்கள்!
4. பரலோகத்தை நோக்கிப் பாருங்கள்!

✤ ✤ ✤ ✤ ✤

அத்தியாயம்
2

# இயேசுகிறிஸ்துவை நோக்கிப்பாருங்கள்!

**''நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியன் நமக்கு இராமல் எல்லாவிதத்திலும் நம்மைப் போல சோதிக்கப்பட்டும் பாவம் இல்லாதவராய் இருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கு இருக்கிறார்'' (எபி. 4:15).**

நீங்கள் அறிய வேண்டிய முக்கியமான சத்தியம், ''கிறிஸ்து எல்லாவிதத்திலும் உங்களைப்போல சோதிக்கப்பட்டவர்'' என்பதாகும். ஆகவே உங்களுடைய சோதனை நேரங்களில் எல்லாம் உங்களுடைய வாழ்க்கையின் பிரச்சனை நேரங்களில் எல்லாம் உங்களைப்போல சோதனையின் பாதையில் கடந்து சென்ற இயேசுகிறிஸ்துவையே நோக்கிப் பாருங்கள்.

அவர் நம்மைப்போல மாம்சமும் இரத்தமும் உடையவரானார். தேவகுமாரனாய் இருந்தும் நமக்காக மனுஷ குமாரனானவர். நம்மைப்போல பசி தாகம் உள்ளவர். இன்று நமக்கு என்னென்ன சோதனைகள் வருகிறதோ அதே சோதனைகள் இயேசுகிறிஸ்துவுக்கும் வந்தன. அவர் எல்லாவிதத்திலும் நம்மைப்போல சோதிக்கப்பட்டும், பாவம் இல்லாத பிரதான ஆசாரியனாய் இருக்கிறார்!

இயேசுவின்மேல் மோதின சோதனைகள் அனைத்தும் படுதோல்வியடைந்தன. ஒரு பிரச்சனைகூட அவரை மேற்கொள்ள முடியவில்லை. ஒரு பாவ போராட்டம்கூட அவரை மேற்கொள்ள முடியவில்லை.

வேதம் தெளிவாய் சொல்லுகிறது, **''அவர்தாமே சோதிக்கப்பட்டும் பாடுபட்டதினாலே அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராய் இருக்கிறார்''** *(எபி. 2:18)*. ஆகவே அவரையே நோக்கிப் பாருங்கள்!

உலகத்தார் பலவகையான தெய்வங்களைக் கும்பிடுகிறார்கள். அந்த தெய்வங்கள் பயங்கரமான ஆயுதங்களை

வைத்து மிரட்டுகின்றன! உருண்ட கண்களும், பெரிய மீசைகளும், சூல் ஆயுதங்களும், வேல் ஆயுதங்களும் அவைகளுடைய கரங்களிலே இருக்கின்றன. அவைகளுக்கு மனுஷரைப் பற்றிய அன்போ மனதுருக்கமோ இருப்பதில்லை. அவைகள் நம்முடைய பிரச்சனைகளையும் போராட்டங்களையும் அறிவதில்லை. நம்மைப் பற்றி தெரியாமல் நம்முடைய பிரச்சனைகளையும் போராட்டங்களையும் உணர முடியாமல் நமக்காக பரிதபிக்க முடியாமல் இருக்கிற தெய்வங்களால் நமக்கு என்ன பிரயோஜனம் உண்டு?

இந்தோனேஷியாவில் சில ஆண்டுகளுக்கு முன்பு பெரிய பஞ்சம் வந்தது. ஆனால் ஜனாதிபதியோ அதைக்குறித்து அக்கறை கொள்ளாமல் செல்வ செழிப்பில் மிதந்துகொண்டிருந்தார். ஜனங்களுடைய பசி, பஞ்சம், பட்டினி, வறுமையைப் பற்றி அவருக்கு ஒன்றுமே தெரியாது.

ஜனங்கள் எல்லோரும் கூக்குரலிட்டுக்கொண்டிருந்தபோது தன்னுடைய மாளிகையிலிருந்து வெளியே வந்தார். மந்திரியைக் கூப்பிட்டு, ''ஏன் இந்த ஜனங்கள் கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்?'' என்று விசாரித்தார். அதற்கு அந்த மந்திரி, ''அவர்களுக்கு குடிக்க கஞ்சி இல்லை. பசி வாட்டுகிறது. ஆகவே சத்தமிடுகிறார்கள்'' என்று சொன்னார்.

அதற்கு அந்த ஜனாதிபதி, ''கஞ்சி இல்லையானால், எல்லோரையும் கேக் வாங்கி சாப்பிடச் சொல்லுங்கள்'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார். அவருக்குப் பசி என்றால் என்ன என்று தெரியவில்லை. ''கஞ்சி, ரொட்டி'' என்றால் என்ன என்று தெரியவில்லை. அவருக்கு தெரிந்ததெல்லாம் கேக்தான். கேக் சாப்பிட்டு கொழுத்துப் போய்க்கொண்டிருக்கிற ஒருவரால் எப்படி மற்றவர்களுக்கு கஞ்சிகூட இல்லாத நிலைமையை புரிந்துகொள்ள முடியும்?

நாம் ஆராதிக்கிற நம் ஆண்டவர் பரலோகத்தில் தேவதூதர்கள் மத்தியிலே சந்தோஷமாய் இருக்க விரும்பவில்லை. பிதாவின் மடியில் செல்லப்பிள்ளையாய் உட்கார்ந்திருப்பதை விட்டுவிட்டு நமக்காக அடிமையின் ரூபமெடுத்தார். நம்மைப் போல சோதிக்கப்பட்டார். நமக்கு வருகிற பாடுகளெல்லாம்

அவருக்கு வந்தபடியினால் நம்முடைய சோதனை நேரங்களில் அதை உணர்ந்து நமக்கு உதவி செய்கிறார். நம் கஷ்டத்தை சொல்லும்போதெல்லாம் மனதுருகி அதைக் கேட்கிறார்.

நம்முடைய கண்ணீரின் பிரச்சனையை அவரிடத்தில் சொல்லலாம். காரணம் அவர் கண்ணீர் சிந்தியவர். லாசருவின் கல்லறையண்டையில் (யோவா 11:35), எருசலேமைப் பார்த்து (லூக். 19:41), கெத்செமனே தோட்டத்தில் கண்ணீர் சிந்தியவர் (எபி. 5:7). ஆகவே நம்முடைய கண்ணீரைக் கண்டு மனதுருகி தன்னுடைய பொற்கரத்தால் கண்ணீர் யாவையும் தொட்டு துடைப்பார்.

நமக்கு வரும் அநீதிகள், துரோகங்கள், சிநேகிதர்களால் பகைக்கப்பட்ட நேரங்கள் எல்லாவற்றையும் மனம் திறந்து அவரிடத்திலே சொல்லலாம். காரணம் கிறிஸ்துவே அதே பாதையில் நடந்தவர். யூதாஸ்காரியோத்தின் துரோகத்தை அவர் அறிந்திருக்கிறார். பேதுரு மறுதலித்தபோது அவர் பட்ட வேதனையை நினைவுகூருகிறார். ஆகவே நம்முடைய துன்பங்கள் துயரங்களை எப்பொழுதும் ஆண்டவரிடத்திலே சொல்லலாம். அவருடைய கிருபாசனத்தண்டை தைரியமாய் கிட்டிச் சேரலாம்.

ஒரு இளம் ஊழியருக்கு தாங்கொண்ணாத நோய்களும் வியாதிகளும் வந்தது. மரணத் தருவாய்க்கு வந்துவிட்டார். சரீரத்திலே கொடிய வலி வேதனைகள். யாரும் அவரை வந்து பார்க்கவோ, ஆறுதல் சொல்லவோ இல்லை. ஏறக்குறைய ஆறு மாதங்கள் இந்த போராட்டத்தின் வழியாக கடந்து சென்றார்.

முடிவிலே கர்த்தர் அவருக்கு அற்புதமான சுகம் கொடுக்கும் போது, ''மகனே, பெரிய சுகமளிக்கிற ஊழியத்திலே உன்னைக் கொண்டு செல்ல விரும்புகிறேன். குணமாக்கும் வரங்களை உனக்குத் தர விரும்புகிறேன். மற்றவர்களுடைய நோய்களையும், பாடுகளையும் குறித்து உனக்கு ஒரு மனதுருக்கம் ஏற்பட வேண்டுமென்பதற்காகவே நோய்களின் பாதையிலே உன்னைக் கொண்டு சென்று சோதித்தேன். நீ பொறுமையுடன் சகித்துக் கொண்டபடியினால் உனக்கு உயர்வான ஊழியத்தை வல்லமையான வரங்களைத் தருகிறேன்'' என்று சொன்னார். அப்படியே

கர்த்தர் இன்றும் அந்த ஊழியரை வல்லமையாக பயன்படுத்தி நடத்துகிறார்!

இயேசுவானவர் நம்மைப்போல எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டார் என்று சொல்லுகிற வார்த்தை நாம் அவருடைய கிருபாசனத்தண்டை நெருங்கி கிட்டிச் சேர நமக்கு உதவி செய்கிறது. அந்த இயேசுக்கிறிஸ்துவை அன்போடு நோக்கிப் பாருங்கள்!

ஏமாற்றம் என்றால் என்ன என்று அவருக்குத் தெரியும். அவர் பிறந்தபோது சத்திரத்தில்கூட அவருக்கு இடமில்லை. ஏழை தச்சன் வீட்டிலே அவர் பிறந்தார். இயேசு இளம் வாலிபனாக இருக்கும் பொழுதே அவருடைய வளர்ப்பு தகப்பனாகிய யோசேப்பு மரித்துப்போனார் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். மரணம், தாயாரினுடைய அழுகை எல்லா வற்றையும் அவர் அறிந்திருக்கிறார். தன்னுடைய உடன் சகோதர, சகோதரிகளை வளர்க்கும் பெரிய பொறுப்பு இயேசுவின் தோள்மேல் வந்தது. உத்தரவாதம் என்ன என்று அவர் அறிந்திருக்கிறார்.

தனிமை என்றால் எவ்வாறு இருக்கும் என்று அவருக்குத் தெரியும். தனிமையாக நாற்பது நாட்கள் உபவாசமிருந்து ஜெபித்தார். வனாந்தரங்களுக்கும், மலைச் சரிவுகளுக்கும் சென்று தனிமையாக பிதாவை தேடினார். ஒரு தடவை அவருடைய உபதேசம் கடினமான உபதேசம் என்று ஜனங்கள் பின்வாங்கிச் சென்றபோது தன்னை தொடர்ந்துகொண்டிருந்த பன்னிரண்டு சீஷர்களைப் பார்த்து, "**நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?**" என்று துயரத்தோடு கேட்டார்.

கெத்செமனே தோட்டத்திலே அவரைப் போர் வீரர்கள் பிடிக்க வந்தபோது, எல்லோரும் சிதறி ஓடிவிட்டார்கள். சிலுவையின் அடிவாரத்தில் தனிமையாக மரிக்கும் சூழ்நிலையில் தனிமையில்தான் "**என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?**" என்று கதறினார். நன்மையை செய்து தீமையை அனுபவித்தார். நேசித்தவர்களால் வெறுக்கப்பட்டார்.

மாடுகூட தனக்கு நன்மை செய்தவனுக்கு தீமை செய்யாது. ஒரு தத்துவ ஞானி சொன்னார். 'பசியாய் இருக்கிற நாய்க்கு

ஆகாரம் கொடு, அது வாலை ஆட்டும். பசியாய் இருக்கிற மனுஷனுக்கு ஆகாரம் கொடு, அவன் உன் கையைக் கடிப்பான்'' என்றார்.

சிலுவையிலே இயேசு அறையப்பட கொண்டுபோகப்படும் போது அவரிடத்திலே நன்மை பெற்றவர்களே அவரை சிலுவையில் அறையும், அவரை சிலுவையில் அறையும் என்று கத்தினார்கள். அவரால் சுகம் பெற்ற ஆயிரக்கணக்கான மக்கள் எங்கே? அப்பத்தையும், மீனையும் புசித்த ஐந்தாயிரம் பேர் எங்கே? பார்வையடைந்த குருடர்கள், முடமாய் இருந்து நடந்த சப்பாணிகள், குஷ்டரோகிகளாய் இருந்து குணமானவர்கள், சுகமான திமிர்வாதக்காரர்கள் எங்கே, எங்கே?

அருமையான தேவனுடைய பிள்ளையே, ஆறுதலற்று இருக்கும் நமக்கு உதவி செய்ய திராணியுள்ளவராய் இருக்கும்படி கிறிஸ்து அந்த பாதையின் வழியாய் கடந்து சென்றார். ஆகவே உன் தனிமை அவருக்குத் தெரியும். உன் போராட்டம் அவருக்குத் தெரியும். உன்னுடைய பிரச்சனை அவருக்குத் தெரியும். நன்றி கடன்பட்டவர்கள் உனக்குச் செய்த துரோகங்கள் அவருக்குத் தெரியும்.

கலங்காதே, அவருடைய கிருபாசனத்தண்டை தைரியமாய் நீ கிட்டிச்சேர முடியும். அவர் ஒருவரே உன் எல்லாப் பிரச்சனைகளையும் அறிந்திருக்கிறவர். அவர் ஒருவரே உனக்காக பரிதபிக்கிறவர். உன் திராணிக்கு மிஞ்சி அவர் ஒருபோதும் உன்னை சோதிப்பதில்லை. ஆகவே வேதம் சொல்லுகிறது: **''ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும் தைரியமாய் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்''** *(எபி. 4:16).*

தேவபிள்ளையே, கிருபாசனத்தண்டை சேர்ந்து அருமை ஆண்டவர் இயேசுவை நோக்கிப் பார்! உனக்கு உதவி செய்ய அவர் ஜீவனுள்ளவராய் இருக்கிறார். உன்னுடைய எல்லா நெருக்கமான சூழ்நிலையிலும் உன்னோடு இருப்பதற்கு வாக்குப் பண்ணியிருக்கிறார். ஆகவே நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை. இந்த சத்தியத்தை உறுதியாய் உங்களுடைய உள்ளத்தில் பதித்துக்கொள்ளுங்கள்.

முதலாவது, நம்முடைய பலவீனங்களைக் குறித்து அவர் பரிதபிக்கிறார். இரண்டாவது, நம்முடைய பலவீன நேரங்களிலே நமக்காக விண்ணப்பிக்கிற பிரதான ஆசாரியராய் இருக்கிறார். மூன்றாவதாக, நம்முடைய சோதனை நேரங்களிலே நமக்கு உதவி செய்வதற்கு அவர் ஆவலுள்ளவராய் இருக்கிறார். அவரே நம்மைத் தூக்கி எடுக்க வல்லமையுள்ளவர். நிலை நிறுத்த வல்லமையுள்ளவர்! கடைசிவரை வழுவாதபடி பாதுகாக்க வல்லமையுள்ளவர்!

சோதனைக்காரன் உங்களை சோதிக்கும்போது கர்த்தர் கண்களை மூடிக்கொண்டு கைகளை கட்டிக்கொண்டு சும்மா இருக்கிறவர் அல்ல. உங்களைக் காக்கும்படி தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுகிறவர். கண்மணிபோல உங்களைக் காத்துக் கொள்ளுகிறவர். வேதம் சொல்லுகிறது, **''இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குகிறதும் இல்லை, தூங்குகிறதும் இல்லை. அவர் உங்கள் வலது பக்கத்திலே உங்களுக்கு நிழலாயிருக்கிறார்''** (சங். *121:3-5*).

ஒரு சிறுமியிடம் ஓய்வுநாள் பாடசாலையிலே ஒரு கேள்வி கேட்டார்களாம், ''பாப்பா, நீ வீட்டிலே தனியாய் இருக்கும்போது திடீரென்று சாத்தான் வந்து கதவைத் தட்டினால் நீ என்ன செய்வாய்?''

அந்தச் சிறுமி சிறிது யோசித்துவிட்டு உடனே சொன்னாள், ''சாத்தான் கதவைத் தட்டினால் இயேசுவைப் போய் கதவை திறக்கச் சொல்லுவேன். அவன் ஓடியேப் போய்விடுவான்'' என்றாளாம். எத்தனை ஞானமான பதில்!

இயேசு ஏற்கெனவே சாத்தானை தோற்கடித்தவர். ஏற்கெனவே அவனுடைய தலையை சிலுவையிலே நசுக்கினார். அவனுடைய வல்லமையை அழித்தவர். அவனுடைய அக்கினி ஆஸ்திரங்களை முறித்தவர்.

உங்களை திரும்பத் திரும்ப சோதனைக்கு உட்படுத்திக் கொண்டிருக்கிற சாத்தானை அவர் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கமாட்டார். நீங்கள் விழுந்து விழுந்து எழும்புவது அவருடைய சித்தம் அல்ல. நீங்கள் அவரைக் கூப்பிட்டால் நிச்சயமாகவே அவர் உங்களுக்கு உதவி செய்வார். **''ஆபத்துக்**

காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன்'' என்று அவர் வாக்குப்பண்ணியுள்ளாரே (சங். 50:15).

பேதுரு தண்ணீரிலே மூழ்கும்போது ஆண்டவரை நோக்கிப் பார்த்து, ''இயேசுவே, இரட்சியும்'' என்று குரல் கொடுத்தார். அவர் சோதனை நேரத்தில் பெரிய ஜெபங்கள் பண்ணிக்கொண்டிருப்பதற்கு நேரமில்லை. ஒரு சின்ன ஜெபம்தான், உடனே கர்த்தர் கையைப் பிடித்து தூக்கிவிட்டு, **''அற்ப விசுவாசியே ஏன் பயப்பட்டாய்?''** என்றார்.

தேவனுடைய பிள்ளையே, உன்னுடைய ஒவ்வொரு மூச்சும் ஒரு ஜெபமாய் இருக்கட்டும். சின்ன சோதனைகளானாலும் சரி, பெரிய சோதனைகள் ஆனாலும் சரி அவைகள் உன்னைத் தாக்கும்போது, ''ஆண்டவரே இரட்சியும்'' என்று குரல் கொடுப்பாயா? சோதனை நேரங்களில் நீங்கள் ஜெயிக்கும்படி கர்த்தரை நோக்கிப் பாருங்கள். சோதனை நேரங்களில் அவர் வைத்துப்போன அடிச்சுவடுகள் நமக்கு மிகவும் பிரயோஜனமாய் இருக்கின்றன.

**''நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார்''** (1பேதுரு 2:21).

அடிச்சுவடுகளை வைத்துப் போயிருக்கிறார். பின்பற்ற மாதிரிகளை காண்பித்துப் போயிருக்கிறார். எல்லாவற்றுக்கும் அவர்தான் மாதிரி.

ஜெபத்துக்கும் உபவாசத்துக்கும் அவர்தான் மாதிரி. ஊழியத்துக்கும் மனதுருக்கத்திற்கும் அவர்தான் மாதிரி. ஆகவே, சோதனை நேரங்களில் நம்மைப்போல சோதிக்கப்பட்ட அவரையே நோக்கிப் பாருங்கள். அவரே சோதனைகளிலிருந்து ஜெயம் பெறுகிற வழிமுறைகளுக்கும் மாதிரி!

வேதம் சொல்லுகிறது, **''அவர்களுடைய எல்லா நெருக்கங்களிலும் அவர் நெருக்கப்பட்டார். அவருடைய சமுகத்தின் தூதனானவர் அவர்களை இரட்சித்தார். அவர் தமது அன்பின் நிமித்தமும் தமது பரிதாபத்தின் நிமித்தமும் அவர்களை மீட்டு பூர்வ நாட்களில் எல்லாம் அவர்களைத் தூக்கிச் சுமந்து வந்தார்''** (ஏசா. 63:9).

கர்த்தர் இன்றைக்கு உங்களை அன்போடு நோக்கிப் பார்த்து சொல்லுகிறார், ''என் பிள்ளைகளே, உங்களுடைய எல்லா நெருக்கங்களிலும் நானும் நெருக்கப்படுகிறேன். உங்களுடைய எல்லாப் போராட்டங்களிலும் நானும் உங்களோடு பங்குபெறு கிறேன். உங்களுடைய பிரச்சனை நேரங்களில் உங்களை அனாதையாய் கைவிட்டுவிட்டு நான் ஒதுங்கிச் சென்றுவிடு கிறவர் அல்ல. உங்களுடைய கண்ணீரின் பாதையில் நான் காணாதவரைப்போல தூரமாய் நின்று விடுகிறவர் அல்ல. உங்களுக்கு வருகிற நெருக்கம் எனக்கு வருகிற நெருக்கம். உங்க ளுக்கு வருகிற பாடுகள் சோதனைகள் எனக்கு வருகிற பாடுகள் சோதனைகள். உங்களுடைய எல்லா நெருக்கங்களிலும் நான் உங்களோடு நெருக்கப்படுகிறேன்'' என்றார்!

சிலர் சோதனை நேரத்திலே சோர்ந்துபோய் விடுகிறார்கள். ஜெபிக்க, வேதம் வாசிக்க மனம் சலித்து விடுகிறார்கள். பின் வாங்கி மனித ஒத்தாசையை நாடுகிறார்கள். சிலர் சினிமா தியேட்டரிலே போய் உட்கார்ந்து விடுகிறார்கள். சிலர் மது பானத்திற்கு அடிமையாகி விடுகிறார்கள். ஆனால், நீங்கள் அவரை நோக்கிப் பார்க்க மாட்டீர்களா? என்று கர்த்தர் ஆவ லோடு எதிர்பார்க்கிறார்.

இயேசுவினுடைய ஊழியத்தின் ஆரம்ப நாட்களிலிருந்து கடைசி வரையிலும் அவருக்கு சோதனை மேல் சோதனைதான். அவர் ஞானஸ்நானம் பெற்றதை தொடர்ந்து நாற்பது நாட்கள் சாத்தான் அவரை சோதித்தான் என்று லூக் 4:2ல் வாசிக்கிறோம்.

அதைத் தொடர்ந்து அவன் சிலகாலம் விலகிப்போனாலும் பரிசேயர் சதுசேயர் மூலமாய் அவரைச் சோதிக்க வந்தான். வேதபாரகர் அவரிடம் வந்து அவருடைய வாயின் மொழியில் அவரை சிக்க வைக்க வகை தேடினார்கள்.

விபச்சாரத்திலே கையும் மெய்யுமாய் பிடிபட்ட ஸ்திரீயை அவருக்கு முன்பாகக் கொண்டுவந்து, ''போதகரே நியாயப் பிரமாணம் இவளை கல்லெறியவேண்டும் என்று சொல்லு கிறது. நீர் என்ன சொல்லுகிறீர்?'' என்று கேட்டு சோதித்தார்கள். ''கல் எறியக்கூடாது'' என்று அவர் சொன்னால் நியாயப்

பிரமாணத்திற்கு விரோதி என்று ஆக்கினைக்குள்ளாக தீர்ப்பார்கள். ''கல் எறியும்'' என்று சொன்னால் இரக்கம் இல்லாதவர், அன்பு இல்லாதவர் என்று குற்றஞ்சாட்டுவார்கள். இந்த சோதனையில் என்ன பதில் சொல்லுவது? (யோவா. 8:5,6).

இயேசு ஞானமாக, **''உங்களில் பாவம் இல்லாதவன் முதலாவது கல்லெறியக்கடவன்''** *(யோவா 8:7)* என்று சொன்னார். காரணம், அவரிலே ஞானத்தை உணர்த்துகிற வசனம் கிரியை செய்து கொண்டிருந்தது. தேவ ஞானத்தால் நிரம்பி சோதனையை மேற்கொண்டார். தேவபிள்ளைகளே, சோதிக்கப்படுகிற உங்களுக்கும் நிச்சயமாகவே தமது ஞானத்தைத் தந்தருளுவார்.

இன்றைக்கும் அநேகம் பேர் சோதனை நேரங்களிலே திகைத்துப்போய் என்ன பேசுகிறோம் என்று தெரியாமல் பதறி பேசி விடுகிறார்கள். எரிச்சலோடும் கோபத்தோடும் பேசி விடுகிறார்கள். அதனால் பிரச்சனைகள் அதிகமாக வளர்கின்றன. போராட்டங்கள் பெருகுகின்றன. பேசத் தெரியாமல் பேசி, சிறிய காரியத்தை பெரியதாக்கி விடுகிறார்கள். சிறிய பிரச்சனை தீராத பிரச்சனையாகி விடுகிறது!

**''மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்தில் இருக்கிறது. அதை விரும்புகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்''** *(நீதி. 18:21)*. நாவு ஒரு ஜீவ ஊற்று. உங்களுடைய நாவை நீங்கள் ஞானமாய் பயன்படுத்த அறிந்துகொண்டால் நூற்றுக்கு தொண்ணூறு சதவீதம் சோதனைகளிலே வெற்றி பெற்றுவிடலாம்.

இயேசுவை சோதிக்க இன்னும் ஒரு கூட்டத்தார் வந்தார்கள். ''இராயனுக்கு வரி கொடுப்பது நியாயமா?'' என்ற கேள்வியை எழுப்பினார்கள். அந்த நாட்களில் ரோம சக்கரவர்த்தியாகிய இராயன்தான் அரசாண்டு கொண்டிருந்தான். இராயனுக்கு வரி கொடுக்கவேண்டுமென்று சொன்னால் யூதர்களுக்கு விரோதியாக்கிவிடுவார்கள். இராயனுக்கு வரி கொடுக்கக்கூடாது என்று சொன்னால் அரசாங்கத்திற்கு எதிரியாக்கி விடுவார்கள். அப்படியும் சொல்ல முடியாது. இப்படியும் சொல்ல முடியாது. பயங்கரமான சோதனை!

இயேசு ஞானமாக ஒரு நாணயத்தை கொண்டு வரச் சொன்னார். அதிலே இராயனுடைய சொரூபம் இருந்தது (மாற். 12:15

மத். 22:19; லூக். 20:24) ''**இராயனுடையதை இராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் கொடுங்கள்**'' என்றார்.

நாணயத்திலே இராயன் தன்னுடைய முகரூபத்தை பொறித்திருக்கிறான். ஆனால், உங்களிலே கர்த்தர் தம்முடைய ரூபத்தை பொறித்திருக்கிறார். நீங்கள் தேவசாயலில் தேவ ரூபத்திலே உருவாக்கப்பட்டவர்கள். இராயனுடைய வரிப்பணத்தை இராயனுக்குக் கொடுங்கள். உங்களை சிருஷ்டித்த தேவனுக்கு உங்கள் ஆத்துமாவைக் கொடுங்கள்! எத்தனை ஆழமான சத்தியம் உள்ளே பொதிந்து இருக்கிறது!

இன்னொருவன் அவரை சோதிக்க வருகிறான். ''நல்ல போதகரே'' என்று அவரை அழைத்துக் கேள்வி கேட்க ஆரம்பித்தான். அவன் முகஸ்துதி பேசுகிறதை கர்த்தர் உடனே அறிந்தார். ''**பிறனை முகஸ்துதி செய்கிறவன் அவன் கால்களுக்கு வலையை விரிக்கிறான்**'' என்று நீதி 29:5 சொல்லுகிறது. ''**மனுஷனுக்கு அவனுக்கு உண்டாகும் புகழ்ச்சியே சோதனை**'' என்று நீதி 27:21-ல் வாசிக்கிறோம்.

சிலரை கொஞ்சம் புகழ்ந்துவிட்டால் போதும் உச்சி குளிர்ந்து கடைசியிலே சோதனையிலே விழுந்து விடுவார்கள். சிலருக்கு யாராவது தங்களுடைய அழகைப் பாராட்ட வேண்டுமென்ற ஆசை உண்டு. சிலருக்கு தங்களுடைய திறமைகள் பாராட்டப்பட வேண்டுமென்ற ஆசை உண்டு. பேர் புகழுக்காக ஏங்குகிறவர்களை சாத்தான் தந்திரமாக எளிதில் மடக்கிப் பிடிக்கிறான்.

இயேசுகிறிஸ்து அந்த சோதனைகளிலும் விழவில்லை. ''**நீ என்னை நல்ல போதகரே என்று ஏன் அழைக்கிறாய்? தேவன் ஒருவரைத் தவிர நல்லவர் ஒருவரும் இல்லையே?**'' (மாற்கு 10:18) என்று சொல்லி அதோடு அந்த சோதனைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்!

இன்னொரு கூட்டத்தார் அவரை ராஜாவாக்க வேண்டுமென்று ஆசையோடு பிடித்துக்கொண்டு போக வந்தார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து அவர்கள் மத்தியிலிருந்து விலகி தனிமையாய் புறப்பட்டுச் சென்றுவிட்டார். பேர் புகழை அவர் நாடவில்லை.

இன்னொரு முறை சாத்தான் பேதுருவுக்குள் புகுந்து பேதுரு மூலமாக சோதித்தான். ''கிறிஸ்துவுக்கு பாடுகள் வரக்கூடாது'' என்று பேதுரு சொன்னபோது உடனே கர்த்தர், **''அப்பாலே போ சாத்தானே''** என்று கடிந்து கொண்டார் **''நீ தேவனுக்கு ஏற்றவைகளை சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளை சிந்திக்கிறாய்''** (மத்தேயு 16:23) என்றார்.

சிலுவையிலும்கூட அந்த சோதனைகள் நின்றுவிடவில்லை. தாங்கொண்ணா வேதனை அனுபவித்து தாமே நிவாரண பலியாய் ஒப்புக்கொடுத்து அவர் தொங்கிக் கொண்டிருந்த போது வார்த்தைகளாகிய ஈட்டியினால் அவரைக் குத்தி சோதித்தார்கள். ''நீ தேவனுடைய குமாரனேயானால் கீழே இறங்கி வா; அப்பொழுது உன்னை விசுவாசிப்போம்'' என்றார்கள்.

இன்றைக்கும் நம்மைப் பார்த்து, ''இறங்கி வா; இறங்கி வா'' என்று சொல்லுகிற கூட்டத்தார் உண்டு. ''நீ உன்னதமான பரிசுத்த ஜீவியத்தில் இருக்காதே. இறங்கி வா, எங்களோடு ஒப்புரவாகு, பழைய உறவுகளோடு ஐக்கியப்பட இறங்கி வா. உன் ஜெப ஜீவியத்திலிருந்து இறங்கி வா'' என்று ஜனங்கள் அழைக்கலாம். ஆனால், தேவனுடைய பிள்ளைகள் ஒருநாளும் தங்களுடைய தகுதியை விட்டு இறங்கவேக் கூடாது. காரணம் பரலோகம் நம்மைப் பார்த்து ஏறிவா என்று அழைத்துக் கொண்டிருக்கிறது.

இயேசு சிலுவையில் இருந்து இறங்கி வரவில்லை. தேவனுடைய குமாரன் என்று நிரூபிப்பதற்காக அவர் இறங்கவில்லை. அவர் எப்பொழுதுமே உயர்ந்தவர். உன்னதத்திற்குரியவர். உன்னதத்திலே பறக்கிற கழுகு காக்கைகளைப் போல இறங்கி வருவது இல்லை. குப்பை மேட்டில் உள்ள கோழிகளோடு நின்று கொண்டிருப்பதில்லை.

தேவனுடைய பிள்ளைகளே, கர்த்தர் உங்களை உன்னதமான அழைப்பினால் அழைத்திருக்கிறார். பூச்சக்கரத்தில் உள்ள எல்லா ஜனங்களிலும் உங்களை அவர் பரிசுத்த ஜனமாக தெரிந்தெடுத்திருக்கிறார். நாம் நம்முடைய தகுதியை விட்டு அந்தஸ்தை விட்டு ஒருநாளும் இறங்கி வரவேக் கூடாது.

சிலர் உங்களை தாக்கிப் பேசலாம். குறை கூறி எழுதலாம்! நீங்கள் பதிலுக்குப் பதில் செய்வதற்காக அவர்கள் மட்டத்திற்கு கீழ்த்தரமாக இறங்கி வந்து விடாதீர்கள்! கர்த்தர் சோதனையை சகித்ததுபோல பொறுமையுடன் சகித்து, கிறிஸ்துவோடு உயரத்தில் நின்றுவிடுங்கள். இறங்கி வராதீர்கள்!

இயேசு இறங்கி வரவில்லையே, அப்படிப்பட்ட அருமையான மேன்மையான இரட்சகரே நம்மோடு இருக்கிறார். எல்லா விதத்திலும் நம்மைப் போல சோதிக்கப்பட்டும் பாவம் இல்லாத பிரதான ஆசாரியரே நமக்கு இருக்கிறார். நாம் செல்லுகிற பாதையை அவர் அறிவார். கண்மணிபோல நம்மைப் பாதுகாத்துக் கொள்வார்.

ஆகவே, எபி. *2:18*, எபி. *4:15,16* ஆகிய இரண்டு வசனங்களையும் திரும்பத் திரும்ப வாசித்து சோதனைகள் வழியாக சென்ற இயேசுவை நோக்கிப் பாருங்கள். இயேசுகிறிஸ்து தன்னோடு இருந்த அருமை சீஷர்களைப் பார்த்து அன்போடு சொன்னார், ''**எனக்கு நேரிட்ட சோதனைகளிலெல்லாம் என்னோடு கூட நிலைத்திருந்தவர்கள் நீங்கள்**'' என்றார் (லூக். *22:28*).

அதிலே அவர், 'சோதனை' என்று சொல்லவில்லை. ''சோதனைகள்'' என்று சொன்னார். அவருக்கு கடைசிவரை சோதனை வந்து கொண்டே இருந்தது. இயேசுகிறிஸ்துவினுடைய சோதனைகளும், உபத்திரவங்களும், பாடுகளும் எவ்வளவு அதிகமானவை.

''**அவர் அசட்டைப்பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடனுபவித்தவருமாய் இருந்தார். அவரை விட்டு நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம். அவர் அசட்டைப் பண்ணப்பட்டிருந்தார். அவரை எண்ணாமல் போனோம்**'' (ஏசா. 53:3).

சிலுவைப் பாடு நேரத்தில் அவர் எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டார். பயமும், திகிலும் அவரை வாட்டியது (மாற்கு *14:3*). மரண பயம் அவருடைய உள்ளத்தைப் பிழிந்தது (மத். *26:30*). முகம்குப்புற விழுந்து கதறி அழுதார். ''**பிதாவே இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படிச் செய்யும்**'' என்றார் (மத்தேயு. *26:39*).

சோதனை, சோதனை, கடினமான சோதனை! ஒவ்வொரு வருக்காகவும் மரணத்தை அவர் ருசி பார்த்தார் (எபி. 2:9). மாத்திரமல்ல, மரணத்தின் அதிபதியான பிசாசானவனை தன்னு டைய மரணத்தினால் வென்றார். சோதனைக்காரனை தன்னு டைய இரத்தத்தால் முறியடித்தார். சத்துருவின் மேல் பூரண வெற்றியை நமக்குப் பெற்றுக் கொடுத்தார்.

தேவனுடைய பிள்ளைகளே, ஜெயங்கொண்ட இயேசுவை நோக்கிப் பாருங்கள். உங்களுடைய வாழ்க்கையில் சோதனை கள் வரும்போது, துக்கங்கள் வரும்போது உங்களுடைய இருதயம் துவண்டு போகாதிருப்பதாக. காரணம், இயேசுதாமே அவைகளை ஜெயித்திருக்கிறார். உங்களுக்கும் நிச்சயமாகவே ஜெயம் கொடுப்பார்.

தெருக்களிலே வித்தை காட்டுகிற பாம்பாட்டி, தான் வைத்திருக்கிற கூடையிலிருந்து பயங்கரமான நாகப் பாம்பை வெளியே எடுத்து விடுகிறான். அது படம் எடுத்து ஆடுகிறது. தீயை கக்கும் கண்களோடு பயங்கரமாய் சீறுகிறது. ''ஐயோ, கொத்தி விட்டால் என்ன செய்வது? உயிரே போய் விடுமே?'' என்று நாம் நடுங்குகிறோம்.

அந்தப் பாம்பாட்டி சொல்லுகிறான், ''பயப்படாதிருங்கள். அந்தப் பாம்பின் வாயிலிருந்த நச்சுப் பல்லை எடுத்துவிட்டேன். அது உங்களுக்கு எந்தத் தீங்கும் செய்ய முடியாது. வெறும் சீறல்தான்'' என்கிறான்.

அதுபோலத்தான் இயேசு கிறிஸ்து சொல்லுகிறார், ''மரணத் தின் அதிபதியான பிசாசை என் மரணத்தினால் ஜெயித்துவிட் டேன். மரணத்துக்கும் பாதாளத்துக்கும் உரிய திறவுகோலை அவன் கையிலிருந்து பிடுங்கிவிட்டேன். இனி எந்த சோதனை யும் உங்களை மேற்கொள்ள முடியாது. நான் உலகத்தை ஜெயித்தேன்'' என்கிறார்.

தேவபிள்ளைகளே, ஜெயங்கொண்ட கிறிஸ்து உங்களோடு இருக்கிறார். உங்கள் கண்கள் அவரையே நோக்கட்டும். ஆமென், அல்லேலூயா!

✤ ✤ ✤ ✤ ✤

அத்தியாயம்
3

# ஜெயங்கொண்ட பரிசுத்தவான்களைக் கவனித்துப் பாருங்கள்!

**''நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது'' (2 தீமோ. 4:7,8).**

சோதனை வேளைகளிலே தேவனுடைய பிள்ளைகள் அறிந்து கொள்ளவேண்டிய முதல் சத்தியம் ஜெயங்கொண்ட இயேசுவை நோக்கிப் பார்ப்பதுதான். இரண்டாவது சத்தியம் ஜெயங்கொண்ட பரிசுத்தவான்களை கவனித்துப் பார்க்க வேண்டும். உன்னதங்களிலே ஜெயங்கொண்டவர்களாய் நட்சத்திரங்களைப் போல் பிரகாசிக்கும் பரிசுத்தவான்களை நோக்கிப் பாருங்கள்!

இன்றைக்கு சோதனைகளிலே விசுவாசிகள் விழுவதற்கு காரணம் என்னவென்றால் அவர்கள் விழுந்தவர்களையே நோக்கிப் பார்த்ததாகும். அந்தப் பார்வை கீழ்நோக்கியப் பார்வை! தோல்வியடைந்தவர்களையே பார்க்கும் பார்வை! அதனால் அவர்களுடைய உள்ளான மனுஷனில் தடுமாற்றம் வந்துவிட்டது. சோர்புக்கு இடம் கொடுத்துவிட்டார்கள். அவிசுவாசம் அவர்களை விழப்பண்ணி விட்டது.

எபேசு சபை விசுவாசிகளில் பாராட்டக்கூடிய ஒரு காரியம் இருந்தது. அவர்கள், அப்போஸ்தலர்கள் அல்லாதவர்கள் தாங்கள் அப்போஸ்தலர்கள் என்று சொல்லுகிறதை சோதித்து அவர்களை பொய்யர் என்று கண்டறிந்தார்கள் (வெளி. 2:2).

எந்த ஊழியக்காரரைப் பார்த்தாலும், ''அவர் உண்மையான ஊழியக்காரரா இல்லையா?'' என்று சோதித்துக் கொண்டே இருப்பார்கள். சிலரை பொய்யர் என்று கண்டுபிடித்து விட்டால் அதையே பேசிக்கொண்டு திரிவார்கள். முடிவிலே அவர்கள் ஆதியிலே இருந்த அன்பை விட்டுவிட்டார்கள் (வெளி. 2:4).

[illegible] பெறும்” என்ற ஒரு பழமொழி உண்டு. அதே நேரத்தில், [illegible] என்று [illegible] பழமொழியும் உண்டு. [illegible] [illegible]

[illegible]

[illegible]

[illegible] (Tortured for Christ) [illegible] புத்தகம் [illegible]

[illegible]

போதகர் ரிச்சர்டு உம்பிராண்ட் வாழ்ந்து வந்த ருமேனியா தேசம் கம்யூனிஸ்டு கைகளிலே விழுந்தபோது அரசாங்கம் போதகர்களை அழைத்து ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்கள்.

''இனி, போதகர்களாகிய நீங்கள் கம்யூனிச கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நாங்கள் சொல்லுகிறபடி தான் உங்களுடைய ஆலய ஆராதனையையும், பிரசங்கங்களையும் நடத்த வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்குத்தான் போதகர் ஸ்தானம் கொடுப்போம். மற்றவர்கள் சபை நடத்த முடியாது'' என்று சொன்னார்கள்.

அந்த தேசத்தின் கம்யூனிச கொள்கையோ கடவுள் இல்லை என்கிற நாத்திகவாதமாய் இருந்தது. எப்படி அந்த கொள்கைக்கு தேவ ஊழியர்கள் துணைபோக முடியும்? பெரிய சோதனை அல்லவா?

பெரும்பாலான போதகர்களும், பிஷப்மார்களும் அரசாங்க கொள்கைக்கு 'ஆமாம்' போட்டுவிட்டார்கள். ஏனென்றால் அவர்களுக்குத் தெரியும்; மறுத்துப் பேசினால் கொடிய சித்திர வதைகளும், சோதனைகளும், பாடுகளும் தொடரும் என்பது.

போதகர் ரிச்சர்டு உம்பிராண்ட் அமைதியாய் இருந்ததைப் பார்த்ததும் அருகிலிருந்த அவருடைய மனைவி அவரை ஒரு இடி இடித்தார்கள். ''ஏன் அமைதியாய் இருக்கிறீர்கள்? ஆண்டவருக்காக வைராக்கியமாய் பேசுங்கள். கடவுள் இல்லை என்ற வாதத்தை ஒப்புக் கொள்ள மாட்டோம்'' என்று சொல்லுங்கள் என்றார்கள்.

ஆனால், இவர் மனைவியைப் பார்த்து, ''இப்பொழுது என்ன அரசாட்சி நடக்கிறது என்று உனக்குத் தெரியாதா? நான் அப்படி எழுந்து பேசினால் உனக்கு கணவனாய் இருக்க முடியாது. அருமை மகனுக்கு தகப்பனாய் இருக்க முடியாது. ஆகவே அமைதியாய் இரு'' என்றார்.

அவருடைய மனைவி மீண்டும் அவரைப் பார்த்து கோபமாக, ''இப்படிப்பட்ட கோழையான கணவன் எனக்கு இருப்பதைப் பார்க்கிலும் இல்லாமல் இருப்பதே நலம்'' என்றாள்.

அந்த வார்த்தை அவருடைய உள்ளத்தை கட்டது. அவர் எழுந்து கர்த்தருக்காக வைராக்கியமாய் பேசினார். அரசாங்கத்தோடு ஒத்துப் போக முடியாத சூழ்நிலையை அவர் விவரித்தார். அதன் நிமித்தம் அவருக்கு 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை கிடைத்தது.

பயங்கரமான பாடுகள் சித்திரவதைகளின் வழியாக செல்லும் போது பாடுகளை விவரித்து தன் மனைவிக்கு கடிதம் எழுதி, "ஐயோ என் சரீரத்தில் பல இடங்களில் சதையை வெட்டி எடுக்கிறார்கள். பயங்கரமான நிந்தைகளும், அவமானமும், பாடுகளும் வேதனைப்படுத்துகிறது. பசி பட்டினி வாட்டுகிறது. சவுக்கடிகளை தாங்க முடியவில்லை. கர்த்தரை மறுதலித்து விடுவேனோ என்று பயமாய் இருக்கிறது" என்று எழுதினார்.

அதற்கு அவருடைய மனைவி கொடுத்த பதில் என்ன தெரியுமா? "சிறிய அக்கினியாய் இருந்தால் சோதனைக் காற்று வீசும்போது அது அணைந்து விடும். ஆனால் பெரிய அக்கினியில் சோதனைக் காற்று வீசினால் அந்த அக்கினி பற்றிப் பிடித்து அதிகமாய் பரவும். உங்களுக்குள்ளே கர்த்தர் போட்டிருக்கிற அக்கினி கல்வாரி அன்பின் அக்கினி. பரிசுத்த ஆவியாகிய தெய்வீக அக்கினி. ஆகவே நீங்கள் பற்றிப் பிடித்து பரவுவீர்களே தவிர ஒருநாளும் மறுதலிக்கவே மாட்டீர்கள். ஜெயங்கொண்ட பரிசுத்தவான்களாகவே விளங்குவீர்கள்" என்று பதில் கொடுத்தார்கள்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, ஜெயங்கொண்ட பரிசுத்தவான்களை நோக்கிப் பாருங்கள். வேதம் முழுவதும் திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. தங்களுடைய ஓட்டத்தை வெற்றியோடு ஓடி முடித்து ஜீவ கிரீடங்களை சூடிய பரிசுத்தவான்கள் நம்மைச் சூழவும் இருக்கிறார்கள்.

## ஆபிரகாமின் வாழ்வில்!

ஆபிரகாமை ஜெயங்கொண்ட பரிசுத்தவானாய் நான் பார்க்கிறேன். லோத்துவுக்கு நீர்வளம், நிலவளம் மிகுந்த சோதோம் கவர்ச்சியாய் இருந்ததுபோல ஆபிரகாமுக்கு கவர்ச்சியாய் இருக்கவில்லை. நீ வலதுபுறம் போனால் நான் இடது புறம்

போகிறேன் என்று லோத்துவின் பார்வையில் சிறந்ததை லோத்துவுக்கு விட்டுக் கொடுத்து விட்டு எதிர்புறமாக கடந்து சென்றார். கண்களின் இச்சையினால் அவர் இழுபடாமல் தேவனுடைய சித்தத்திலே சார்ந்திருந்தார்.

இன்னொரு முறை சோதோமின் ராஜாவும் அவனோடு கூட மொத்தம் ஐந்து ராஜாக்களும் சேர்ந்து சென்று எதிராளிகளாய் இருந்த நான்கு ராஜாக்களிடம் தோல்வியடைந்தார்கள். இதனால் லோத்தும் அவனுடைய குமாரத்திகளும் சிறைப்பட்டுப் போனார்கள்!

இதைக் கேள்விப்பட்டபோது ஆபிரகாம் தைரியமாய் தன்னிடமிருந்த 318 பேரை கூட்டிக்கொண்டு அவர்களோடு யுத்தம் பண்ணி மடங்கடித்து ஜனங்களை மீட்டுக்கொண்டு வந்தார். எத்தனை பெரிய ஜெயம்! நான்கு ராஜாக்களோடு இருந்த பலத்த யுத்த வீரர்களை ஆபிரகாமின் 318 சேவகர்கள் முறியடித்தார்கள். அவருடைய மன உறுதியும் தைரியமும் மட்டுமல்ல, அவருக்கு இருந்த கர்த்தருடைய ஒத்தாசையையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

சோதோமின் ராஜா ஆபிரகாமைப் பார்த்து ஜனங்களை எனக்குத் தாரும், பொருட்களை நீர் எடுத்துக் கொள்ளும் என்று சொன்னபோது ஆபிரகாமின் பதில் என்ன? **''அதற்கு ஆபிரகாம் சோதோமின் ராஜாவைப் பார்த்து ஆபிரகாமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும் உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று வானத்தையும், பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன் என்றார்''** *(ஆதி. 14:22,23).*

பாருங்கள், ஆபிரகாம் அந்த பொருட்களினாலோ கொள்ளையில் கிடைத்த உடமையினாலோ தன்னை தீட்டுப்படுத்தவில்லை. சோதோமின் ராஜா தரும் ஐசுவரியம் வேண்டாம். கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும் என்பதை அறிந்திருந்தார். ஆகவே வேண்டாம் என்று திட்டமாய் மறுத்து விட்டார். சோதனையில் ஜெயம் கொண்டார். எனக்கு ஐசுவரியம் கர்த்தர்தான் என்றுச் சொல்லி உலக மேன்மைகளை

உதறித் தள்ளிய மனப்பக்குவம் ஆபிரகாமுக்கு இருந்தது. சோதனையில் ஜெயம் கொண்ட அந்த பரிசுத்தவானை நோக்கிப் பாருங்கள்.

### எலிசாவின் ஊழியத்தில்

பொருளாசையில் ஜெயங்கொண்ட இன்னொரு பரிசுத்தவான் எலிசா. நாகமானுடைய குஷ்டரோகத்தை சொஸ்தமாக்கினபோது நாகமான் எவ்வளவோ பரிசுப் பொருட்களை எலிசாவுக்கு கொடுப்பதற்கு ஆயத்தமாய் இருந்தார். ஆனால் எலிசா சொன்ன பதில் என்ன? "நான் வாங்குகிறதில்லை என்று கர்த்தருக்கு முன்பாக அவருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றார். வாங்க வேண்டுமென்று அவனை வருந்தினாலும் மறுப்பு பண்ணிவிட்டார்" (2 இராஜா. 5:16).

இன்றைக்கு எத்தனை பேர் பொருளாசைக்கும், மற்ற ஆசைகளுக்கும் அடிமைப்பட்டு போயிருக்கிறார்கள். தவறு வழிகளிலே பணம் சம்பாதிக்க நினைக்கிறார்கள். அற்ப பணத்திற்காக கிறிஸ்துவினுடைய நாமத்தை விலை பேசி விடுகிறார்கள். அரசியல் ஆதாயத்திற்காக, அரசாங்க சம்பளத்திற்காக தாங்கள் கிறிஸ்தவன் என்பதையே மறைத்து விடுகிறார்கள்.

ஒவ்வொரு வருடமும் கிறிஸ்தவர்களாய் இருந்து படிப்புக்காகவும், சலுகைகளுக்காகவும், வேலைகளுக்காகவும் தங்களை "இந்துக்கள்" என்று மாற்றுகிறவர்கள் வருடத்திற்கு பன்னிரண்டாயிரம் பேர் என்று ஒரு தகவல் குறிப்பிலே பார்க்க நேர்ந்தது. அற்ப பணத்திற்காக நித்திய ராஜ்யத்தை இழந்து விடுவது எத்தனை வேதனையானது. பரலோக பொற்தள வீதியிலே உலாவுவதை விட்டு விட்டு பாதாளத்தை நோக்கி கடந்து செல்லுவது எத்தனை வேதனையானது.

ஆதி நாட்களிலே பொன்னம்மா சத்தியாசீர் உச்சதொனியிலே ஒரு பாடலைப் பாடுவார்கள். "மண்ணுக்காக மாணிக்கத்தை விட்டிடமாட்டேன். வெறும் மண்ணுக்காக மாணிக்கத்தை விட்டிட மாட்டேன்" என்பதே அந்தப் பாடல்.

மண்ணாசைக்காக பொருளாசைக்காக விலையேறப்பெற்ற மாணிக்கமான இயேசு கிறிஸ்துவை நான் விடவே மாட்டேன்.

ஆம்! சோதனைகளில் ஜெயங்கொண்ட பரிசுத்தவான்களை நோக்கிப் பாருங்கள்.

பக்தனான யோபு!

யோபு பக்தன் தன் மனைவியின் தீமையான ஆலோசனைக்கு செவி சாய்க்கவில்லை. தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்று அவருடைய மனைவி சொன்னபோது, **''நீ பயித்தியக்காரி பேசுகிறது போலப் பேசுகிறாய். தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ என்றான். இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ் செய்யவில்லை''** (யோபு 2:10). தேவனுடைய பிள்ளைகளே, ஜெயங்கொண்ட பரிசுத்தவான்களை நோக்கிப் பாருங்கள்.

ரேகாபியரின் குமாரர்!

ரேகாபியருடைய குமாரர்களைக் குறித்து எரே. 35:5-ல் நாம் வாசிக்கிறோம். அவர்கள் திராட்ச ரச ஆசைக்கு செவி சாய்க்க வில்லை. அந்த சோதனையிலிருந்து தப்பின சந்தர்ப்பத்தை வேதத்திலே வாசித்துப் பாருங்கள்.

**''திராட்ச ரசத்தினால் நிரப்பப்பட்ட குடங்களையும், கிண்ணங் களையும் ரேகாபியருடைய குடும்பத்தைச் சேர்ந்த புத்திரரின் முன்னே வைத்து அவர்களை நோக்கி திராட்ச ரசம் குடியுங்கள் என்றேன். அதற்கு அவர்கள் நாங்கள் திராட்சரசம் குடிக்கிறதில்லை; ஏனென்றால் ரேகாபின் குமாரனாகிய எங்களுடைய தகப்பன் யோனதாப் நீங்கள் பரதேசிகளாய்த் தங்குகிற தேசத்தில் நீடித்திருக்கும்படிக்கு நீங்களும் உங்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் திராட்சரசம் குடியாமலும் வீட்டைக் கட்டாமலும் விதையை விதையாமலும் திராட்சத் தோட்டத்தை நாட்டாமலும் அதைக் கையாளாமலும் உங்களுடைய எல்லா நாட்களிலும் கூடாரங்களிலே குடியிருப்பீர்களாக என்று எங்களுக்கு கட்டளையிட்டார்''** (எரே. 35:5-7) என்றார்கள்.

பேதுரு!

மாய வித்தைக்காரன் பணத்தினாலே தேவனுடைய வரத்தை வாங்கும்படி பேதுருவுக்கு ஆசை காட்டியபோது பேதுரு திட்ட மாய் தீர்க்கமாய் அதை மறுத்துவிட்டார். பேதுரு சொன்ன பதில் என்ன? **''தேவனுடைய வரத்தை பணத்தினாலே சம்பாதித்துக்**

[illegible]

[illegible]

[illegible]

## [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

வருக்கு நன்றி செலுத்துங்கள். விழுந்துபோன ஊழியர்களை தூக்கி எடுக்க முயற்சியுங்கள். அவர்களை மீண்டும் மீண்டும் குற்றப்படுத்தி இன்னும் அவர்களை மிதித்து வீணாக்கி விடா திருங்கள்.

அதே நேரம் நின்று கொண்டிருக்கிற பரிசுத்தவான்களோடு கரம் கோர்த்து வல்லமையாய் முன்னேறிச் செல்லுங்கள். பரம ராஜ்யத்தை நோக்கி வெற்றி நடை போடுங்கள். கர்த்தர் உங் களை ஜெயங்கொண்ட பரிசுத்தவானாய் நிலை நிறுத்துவார்.

தானியேல் பொருளாசை என்ற சோதனையிலே சிக்கிக் கொள்ளவில்லை. ராஜ்யத்தில் உயர்ந்த பதவி வகித்தபோதிலும், அவைகளின் பாரங்களாலே நிரம்பியிருந்தபோதிலும் பண ஆசையிலோ, பொருளாசையிலோ, பதவி ஆசையிலோ தான் சிக்கிக் கொள்ளவில்லை.

பெல்ஷாத்சார் என்ற ராஜா குடித்து வெறித்து விக்கிரகங் களாகிய தேவர்களை பணிந்கொண்டிருந்தபொழுது மனுஷ கை விரல்கள் தோன்றி அரன்மணையில் சாந்து பூசப்பட்ட சுவரிலே எழுதிற்று. எழுதின அந்தக் கை உறுப்பை ராஜா கண்டார். அந்த எழுத்து என்னவென்று தெரியாதபடியினாலே தானியேலைக் கூப்பிட்டு அனுப்பினார்.

**''பொருளை வெளிப்படுத்தவும், கருகலானவைகளைத் தெளி விக்கவும் உன்னாலே கூடுமென்று உன்னைக் குறித்துக் கேள்விப் பட்டேன்; இப்போதும் நீ இந்த எழுத்தை வாசிக்கவும், இதின் அர்த்தத்தை எனக்குத் தெரிவிக்கவும் உன்னாலே கூடுமானால், நீ இரத்தாம்பரமும் கழுத்திலே பொற்சரப்பணியும் தரிக்கப்பட்டு, ராஜ் யத்திலே மூன்றாம் அதிபதியாய் இருப்பாய் என்றான்.**

**அப்பொழுது தானியேல் ராஜ சமுகத்தில் பிரதியுத்தரமாக : உம்மு டைய வெகுமானங்கள் உம்மிடத்திலேயே இருக்கட்டும்; உம்முடைய பரிசுகளை வேறொருவனுக்குக் கொடும்; இந்த எழுத்தை நான் ராஜாவுக்கு வாசித்து, இதன் அர்த்தத்தைத் தெரிவிப்பேன்.''** (தானி. *5:16,17*).

தானியேல் பேசிய வார்த்தைகளை கவனித்துப் பாருங்கள். வெகுமானங்களையும் பரிசுகளையும் வேறொருவனுக்குக்

கொடும் என்று சொல்லி விட்டார். பொருளாசைக்கு தன்னை விலக்கி பாதுகாத்துக்கொண்டார். மட்டுமல்ல கர்த்தரைக் குறித்து எப்பொழுதெல்லாம் சாட்சி கொடுக்க தனக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததோ அப்பொழுதெல்லாம் ராஜா என்றும் பாராமல் முகஸ்துதி பேசாமல் கர்த்தருடைய நாமத்தை உயர்த்தினார்.

ராஜாவைத் தவிர வேறு யாரை வணங்கினாலும், தொழுது கொண்டாலும் சிங்கக் கெபியிலே போடப்படவேண்டும் என்ற சட்டம் வந்தபோதும் தானியேலோ தன்னுடைய தீர்மானத்தை தவறவிடவில்லை. ஜனங்களுக்குப் பயப்படவில்லை. சோதனையைக் கண்டு துவண்டுவிடவில்லை. தான் முன்பு செய்து வந்தபடியே மூன்று வேளையும் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினார்.

கர்த்தருக்காக வைராக்கியமாக நின்ற தானியேலுக்காக கர்த்தரும் வைராக்கியமாக நின்றார். தானியேலை சிங்கங்கள் சேதப்படுத்தாதபடி அவைகளின் வாயைக் கட்டிப் போட்டார்.

தேவனுடைய பிள்ளையே, ஜெயம்கொண்ட பரிசுத்தவான்களை நோக்கிப் பார். அவர்களுடைய வழிமுறைகளை தைரியமாய் பின்பற்று. கர்த்தர் உனக்கு ஜெயத்தின்மேல் ஜெயம் தருவார்.

✣ ✣ ✣ ✣ ✣

அத்தியாயம்
4

# உங்களையே நீங்கள் சோதித்துப் பாருங்கள்!

**''நீங்கள் உங்களை உய்த்து ஆராய்ந்து சோதியுங்கள்''** (செப். 2:2).

சோதனை நேரங்களில் முதலாவது உங்களைப் போல் எல்லா விதத்திலும் சோதிக்கப்பட்ட இயேசுவை நோக்கிப் பாருங்கள். இரண்டாவது, சோதனை நேரங்களில் உங்களுக்கு முன்பாக பூமியிலே வாழ்ந்து சோதனையிலே ஜெயங்கொண்ட பரிசுத்த வான்களை நோக்கிப் பாருங்கள். மூன்றாவது, உங்களை நீங் களே சோதித்து ஆராய்ந்து பாருங்கள்.

**''எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்து அறியக்கடவன். நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயம் தீர்க்கப்படோம்''** *(1கொரி 11:28,31).*

ஒவ்வொருவரும் தேவ சமுகத்திலே நம்மை நிலைநிறுத்தி நம்மை நாமே சோதித்து அறியவேண்டியது அவசியம். ''நான் செல்லுகிற வழி சரிதானா? தேவனுடைய சித்தத்தின்படி தானா?'' என்பதை திட்டமும் தெளிவுமாய் அறிந்து கொள்ள வேண்டும். நாம் என்னென்ன காரியங்களை சோதித்துப் பார்க்க வேண்டும்.

**''கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள்''** *(எபே.5:10).*

கர்த்தரை பிரியப்படுத்துகிறீர்களா? அல்லது, மனிதனை பிரியப்படுத்துகிறீர்களா? முழு இருதயத்தோடும் முழு ஆத்து மாவோடும் முழு பலத்தோடும் கர்த்தரிடத்தில் அன்பு கூருகிறீர் களா? அல்லது அவரைப் பார்க்கிலும் உங்களுடைய செல் வங்கள் மேலும், வரங்கள் மேலும், பிள்ளைகள் மேலும் அன்பு வைத்திருக்கிறீர்களா? நீங்கள் எதன் மேல் அன்பு வைத்திருக் கிறீர்களோ அதன் மேல் நிச்சயமாகவே சோதனை வரும்.

அடுத்ததாக நீங்கள் விசுவாசம் உள்ளவர்கள்தானா? என்று சோதித்துப் பாருங்கள் (2கொரி 13:5). கர்த்தர் பேரில் உறுதியான விசுவாசம் வைத்திருக்கிறீர்களா? வேத வசனத்தின் மேல் ஆழமான நம்பிக்கை வைத்திருக்கிறீர்களா? அதை சோதித்து அறியுங்கள். சோதனை நேரங்களில் உங்களுடைய விசுவாசம் தடுமாறி விடக் கூடாது.

மட்டுமல்ல, ஒவ்வொரு நாளும் இரவு படுக்கப்போவதற்கு முன்பாக உங்களை நீங்களே சோதித்துப் பாருங்கள். அந்த நாளிலே எந்த பகுதியில் உங்களுக்கு வீழ்ச்சி இருந்தது? எந்த பகுதியிலே சோதனையை உங்களால் மேற்கொள்ள முடிய வில்லை? அப்படி விழுந்ததற்கு என்ன காரணம்? எப்படி இருந் தால் வெற்றி கிடைத்திருக்கும்? என்ன செய்து அதை சரிப் படுத்த முடியும் என்பதை எல்லாம் தியானித்துப் பாருங்கள்.

**''சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படு கிறேன் என்று சொல்லாதிருப்பானாக''** *(யாக் 1:13).*

நீங்கள் தேவ சமுகத்தில் உட்கார்ந்து கடந்த காலத்தை சற்று சிந்தித்துப் பார்த்தால் என்னென்ன பாவ சோதனைகள் அடிக்கடி உங்கள் மேல் மோதியிருக்கிறது, மேற்கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்துகொள்ளலாம்.

''உங்களுடைய பெலவீனம் எது?'' என்று சாத்தான் அறிந்து அந்த பெலவீனமான பகுதியிலே திரும்பத் திரும்ப அவன் சோத னைகளையும் போராட்டங்களையும் கொண்டு வருகிறான்.

''பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்'' என்பது பழமொழி அல்லவா? அதுபோல உங்களை விழப்பண்ணுகிற பாவங்களிலேயே திரும்பத் திரும்ப அவன் உங்களை சோதித்து விழச் செய்வான்.

ஒருவன் பொல்லாத குடிகாரனாயிருந்து இரட்சிக்கப்பட் டிருந்தால் திரும்பத் திரும்ப குடிக்கிற சோதனையைக் கொண்டு வந்து கொண்டே இருப்பான். கோள் மூட்டுகிறவனுக்கு கோள் மூட்டும்படியான சுபாவத்தையும் தொடர்ந்து கொடுப்பான்.

அவனுடைய பழைய சுபாவங்களில் சோதனையைக் கொண்டு வந்து திரும்பத் திரும்ப சோதிப்பான்.

தேவபிள்ளைகளே, உங்களை நீங்களே ஆராய்ந்து பாருங்கள். உங்களில் பூரண பரிசுத்தம் விளங்க வேண்டும். நீங்கள் கிறிஸ்துவின் சாயலில் மறுரூபமாக வேண்டும். நீங்கள் ஒரே சோதனையில் திரும்பத் திரும்ப விழுந்து கொண்டிருந்தால் உங்கள் மனசாட்சி வாதிக்குமே.

ஒரு செயினை எடுத்துக்கொள்ளுங்கள். அதில் நூற்றுக்கணக்கான சிறு வளையங்கள் உள்ளன. அந்த வளையங்களில் ஒரு வளையம் பெலவீனமாய் இருந்தாலும் அந்தச் செயின் அந்த பெலவீனமான பகுதியிலே அறுந்து கீழே விழுந்து விடக்கூடும்.

உங்கள் வாழ்க்கையில் ஒரு பகுதியில் பெலவீனம் இருக்கிறது என்று நீங்கள் நிச்சயமாய் அறிந்தால் அந்த பெலவீனத்தை கண்சாடையாக விட்டு விடாதிருங்கள். அந்த பெலவீனத்திலே நீங்கள் பெலன் கொண்டவர்களாய் விளங்க உபவாசமிருந்து ஊக்கமாய் ஜெபியுங்கள். அந்த பெலவீனப் பகுதியை பெலப்படுத்தி திடப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் உங்கள் வாழ்க்கை நஷ்டமாகிவிடுமே!

அப்.பவுலுக்கு ஒரு பெலவீனம் இருந்தது. அந்த பெலவீனத்தை வைத்தே சாத்தான் அவரைக் குட்டுகிற தூதனாயிருந்தான். அந்த பெலவீனம் நீங்கவில்லை. ஆனாலும் அந்த பெலவீனத்திலே கர்த்தருடைய பெலன் பூரணமாய் விளங்கினதை அவர் உணர்ந்தார்.

தேவபிள்ளையே, உங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் பெலவீனங்கள் உண்டு என்பதை அறிந்துகொள்ளுங்கள். அதை ஏனோதானோ என்று விட்டுவிடாதிருங்கள். எல்லோருக்கும் தானே பெலவீனம் என்று எண்ணி அசட்டை செய்து விடாதிருங்கள்.

பழங்காலத்து கதைகளிலே அக்கிலஸ் என்ற கிரேக்க வீரனைக் குறித்து அறியலாம். அவர் சரீரம் முழுவதும் பாதுகாக்கப்பட்டிருந்தது. எந்த அம்பும் அவருடைய சரீரத்தை துளைக்க

முடியாது. தலையிலிருந்து கால் வரையிலும் அவன் கவசம் அணிந்திருந்தான். அவனுடைய பகைவர்கள் அவனுடைய சரீரத்தின் எந்தப் பகுதியில் அம்பைப் பாய்ச்சினாலும் அது அவனை சேதப்படுத்தாது என்பதை அறிந்திருந்தார்கள்.

அவனைக் கூர்ந்து கவனித்தபோது அவனுடைய பாதங்களிலே வெறுமையாயிருந்ததை கண்டார்கள். அங்கேதான் அவனுடைய பெலவீனம் இருந்தது. அவனுடைய கால்களிலே போதுமான பாதுகாப்பு இல்லாமல் இருந்ததைக் கண்டார்கள். ஆகவே அவனுடைய பகைவர்கள் சரியாக அவனுடைய காலின் மேல் குறிவைத்து அம்பை எய்தார்கள். அதில் அடிபட்டு அவன் கீழே விழுந்தான், மரித்தான்.

உங்களுடைய பெலவீனம் என்ன என்பது சாத்தானுக்குத் தெரியும். அவனே அதைக் கண்டுபிடித்து அம்பை எய்வதற்கு முன்பாக நீங்கள் அதைக் கண்டுபிடித்து ஆவியானவரின் கையில் ஒப்புக்கொடுத்து பெலன் கொள்வது நல்லது!

ஒவ்வொருநாளும் உங்களுடைய பெலவீனத்திற்காக விசேஷமாய் நீங்கள் ஜெபம்பண்ண வேண்டும். காலையில் எழுந்ததும் மற்ற எல்லாக் காரியங்களுக்கும் ஜெபிப்பதற்கு முன்பாக பெலவீனம் உங்களை மேற்கொள்ளாதபடி அதற்காக ஊக்கமாக போராடுங்கள்.

எப்பொழுதாகிலும் அந்த பெலவீனம் உங்களை மேற்கொண்டு நீங்கள் பாவத்திலே விழுந்து விடுவதைப் போல சூழ்நிலைகள் வருமென்றால் உடனே தனி உபவாசத்திற்காக சென்றுவிடுங்கள். ஆவியானவர் உங்களுக்கு நிச்சயமாகவே பெலன் தருவார். சோதனைகளுக்கு தப்பும்படியான ஒரு போக்கை நிச்சயமாகவே உண்டாக்குவார்.

சோதனை நேரத்தில் சிறு சிறு ஜெபங்கள் செய்வது மிகவும் பிரயோஜனமுள்ளதாய் இருக்கும். அது உங்களை சோதனைக்கு தப்புவிக்கும். அவ்வப்பொழுது இயேசுவினுடைய முகத்தைப் பார்த்துக்கொண்டேயிருங்கள். அவருடைய முகத்தை நீங்கள் பார்க்கும்போது பரலோகத்திலிருந்து நிச்சயமாகவே ஒத்தாசை அனுப்பித் தருவார். நீங்கள் சோதனைகளினால் சேதப்படுவதில்லை.

தாவீது ராஜா தன்னைதானே ஆராய்ந்தது மாத்திரமல்ல, ஆண்டவரிடத்தில் ஜெபம்பண்ணி, **''தேவனே என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்துகொள்ளும். தேவனே என்னைச் சோதித்து என்னுடைய சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து நித்திய வழியிலே என்னை நடத்தும்''** என்று தம்மை அர்ப்பணித்து ஜெபித்தார் *(சங் 139:23,24)*.

இன்னும் ஒரு இடத்தில் அவர் ஜெபிக்கிறதைக் கவனியுங்கள். **''தன் பிழைகளை உணருகிறவன் யார்? மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும். அவைகள் என்னை ஆண்டு கொள்ள ஒட்டாதிரும். அப்பொழுது நான் உத்தமனாகி பெரும் பாதகத்துக்கு நீங்கலாய் இருப்பேன்''** என்று ஜெபித்தார் *(சங் 19:12,13)*.

உங்களை நீங்களே நிதானித்து ஆராய்ந்து சரிப்படுத்திக் கொண்டால் நிச்சயமாவே நியாயத்தீர்ப்புக்கு தப்புவீர்கள். கர்த்தர் ஒருநாளும் உங்களை சோதனையில் விழப்பண்ணவே மாட்டார். சோதனைக்கு உட்பிரவேசிக்கப் பண்ணாதபடி தீமையினின்று இரட்சித்துக்கொள்ளுவார்.

தண்ணீர் போன்ற சோதனையா? நீ தண்ணீர்களைக் கடக்கும் போது நான் உன்னோடு கூட இருப்பேன். ஆறுகள் உன் மேல் புரளுவது இல்லை என்று சொல்லி நம்மைப் பாதுகாப்பார். அக்கினி போன்ற சோதனைகளா? அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய். அக்கினி ஜுவாலை உன் பேரில் பற்றாது என்று சொல்லி தேவகுமாரன்தாமே அக்கினிக்கு இறங்கி உங்களைப் பாதுகாப்பார்.

ஒவ்வொருநாளும் தேவ சமுகத்திலே போய் ஜெபித்து ஜெயம் பெறுங்கள். சோதனைகளை எண்ணி முறுமுறுக்காதிருங்கள். தவறியும் கூட கர்த்தரை குற்றம் சாட்டாதிருங்கள். எனக்குதான் இந்த சோதனை. என்னைப்போல் யார் சோதிக்கப்பட்டது உண்டு? எனக்குத்தான் சோதனை மேல் சோதனை என்று எல்லாம் சொல்லி சொல்லி சுய அனுதாபத்தை ஏற்படுத்தி விடாதிருங்கள்.

வேறு சிலர் சோதனை நேரங்களில் பழியை மற்றவர்கள் மேல் போட்டு அவர்களை புண்படுத்திக்கொண்டிருப்பார்கள்.

நான் பாவத்தில் விழுந்ததற்கு அவர்கள்தான் காரணம். இவர்கள்தான் காரணம் என்று ஆதாம் ஏவாளைப் போல குறை சொல்லிக் கொண்டு மற்றவர்களின் மேல் பழி போடுவார்கள்; வேதனைப்படுத்தி விடுவார்கள். தேவனுடைய பிள்ளையே, சோதனை நேரத்தில் நீ சிந்தனை செய்.

சிலர் சோதனை நேரத்தில் கர்த்தரை சோதித்துக் கொண்டிருப் பார்கள் ''எனக்கு கடன் சோதனையாய் இருக்கிறது. இத்தனாம் தேதிக்குள் ஆண்டவரே நீர் எனக்கு பத்து இலட்சம் தந்தால் நீர் உண்மையான தேவன் என்று ஏற்றுக்கொள்ளுவேன். இத்தனாம் தேதி இத்தனை மணிக்குள் தராவிட்டால் நீர் கடவுளே இல்லை என்று சொல்லுவேன்'' என்று கர்த்தரை சோதிக்கிறார்கள்.

''**உன் தேவனாகிய கர்த்தரை பரீட்சை பாராதிருப்பாயாக**'' என்று வேதம் தெளிவாக சொல்லுகிறது (மத்.4:7). நித்தியம் நித்திய மான தேவனை பூமியிலே கொஞ்சம் நாள் வாழும் மனிதன் குறை சொல்லுவதோ அல்லது சோதிப்பதோ எத்தனை வேத னையான துணிகரமான காரியம். வனாந்தரத்திலே இஸ்ரவேல் ஜனங்கள் வழிநடந்து வந்தபோது சிலர் கிறிஸ்துவை பரீட்சித் துப் பார்த்து பாம்புகளால் அழிக்கப்பட்டார்கள். அதுபோல நாமும் கிறிஸ்துவை பரீட்சை பாராதிருப்போமாக (1கொரி 10:9).

அனனியாவும் சப்பீராளும் உண்மையை மறைத்து பரிசுத்த ஆவியானவரை சோதித்தார்கள். ஆகவே பேதுரு அவர்களை கடிந்து கொண்டு, ''**கர்த்தருடைய ஆவியை சோதிக்கிறதற்கு நீங்கள் ஒருமனப்பட்டது என்ன?**'' என்று கேட்டார் (அப் 5:9). உண் மையை மறைப்பதும் பொய் சொல்லுவதும் கர்த்தர் ஒன்றும் கவனிக்கவில்லை என்று நினைத்து மனம் போல் நடப்பதும் அவரை சோதிப்பது அல்லவா?

தேவனுடைய பிள்ளையே, ஒருநாளும் கர்த்தரை சோதிக்கா திருங்கள். அவருடைய கிருபையிலே சார்ந்துகொள்ளுங்கள். ஒவ்வொருநாளும் உங்களை தேவ சமுகத்திலே ஆராய்ந்து பார்ப்பது சோதனையை ஜெயிப்பதற்கு நிச்சயமாகவே உங்க ளுக்கு உதவி செய்யும்.

✣ ✣ ✣ ✣ ✣

அத்தியாயம்
5

# பரலோகத்தை நோக்கிப் பாருங்கள்!

**''சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தம னென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர் களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்''** (யாக் **1:12**).

சோதனையில் அறிய வேண்டிய நான்கு சத்தியங்கள் என்ற தலைப்பிலே தொடர்ந்து நாம் தியானித்துக்கொண்டு வருகிறோம். முதலாவது, நாம் இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பார்க்க வேண்டும். இரண்டாவது, ஜெயங்கொண்ட பரிசுத்த வான்களை கவனித்துப்பார்க்க வேண்டும். மூன்றாவது, நம்மை நாமே சோதித்துப் பார்க்க வேண்டும். கடைசியாக நாம் பரலோகத்தை நோக்கிப் பார்க்க வேண்டும்.

பரலோகம் முழுவதும் ஜெயங்கொண்ட பரிசுத்தவான்களால் நிரம்பி இருக்கிறது. உலகத்திலே கர்த்தருக்காக பாடுபட்டு கடைசி வரையிலும் நின்று பிடித்தவர்கள் பரலோக ராஜ்யத்தை மகிழ்ச்சியோடு சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். **''முடிவுபரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான்''** என்று இயேசு தெளிவாய் நமக்குச் சொல்லியிருக்கிறார் *(மத். 24:13)*.

வெளிப்படுத்தின விசேஷத்தில் கேட்கிற முக்கிய தொனி என்ன? ''ஜெயங் கொள்ளுகிறவன் எவனோ'' என்பதுதான் அந்த தொனி. கோழை சத்தம் போடுகிறவர்களும், விழுந்து விழுந்து எழும்புகிறவர்களும், தோல்வியை அடைந்தவர்களும் பரலோகத்தில் பிரவேசிப்பதில்லை. ஜெயங்கொண்ட பரிசுத்த வான்கள் அதில் பிரவேசிப்பார்கள்.

நீங்கள் ஜெயங்கொண்ட பரிசுத்தவானாக பரலோகத்தில் நிற்பதாக சிந்தித்துப் பாருங்கள். அந்த ஒளிமயமான தேசத்திலே நீங்கள் நிற்கும்போது அதுவும் ஜெயங்கொண்ட பரித்தவான் களாய் நிற்கும்போது எத்தனை சந்தோஷமாய் இருக்கும்!

பழைய ஏற்பாட்டு புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் எல்லாம் ஜெயங்கொண்டவர்களாய் நின்று உங்களை வரவேற்பார்கள். கேருபீன்கள், சேராபீன்கள் ஆயிரம் பதினாயிரமான தேவ தூதர்கள் எல்லாம் கரம் தட்டி உங்களை வரவேற்பார்கள்.

அப். பவுல் போல சந்தோஷத்தோடு சொல்லுங்கள். **"நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்" ( 2 தீமோ. 4:7,8).**

நம்முடைய கண்கள் பரலோகத்தின் மேல் எப்பொழுதும் நோக்கமாய் இருக்கட்டும். அந்த நித்திய ராஜ்யத்தில்தான் நாம் நித்திய நித்திய காலமாக யுக யுகமாக வாழ்ந்து சுகித்திருப்போம். பரலோகத்தில் உள்ள ஜீவப் புத்தகத்தில் நம்முடைய பெயர் எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தர் நமக்காக அருமையான அழகான பரலோக வாசஸ்தலங்களை ஆயத்தமாக்கிக் கொண்டிருக்கிறார் (யோவான் 14:3).

ஆம், நம்முடைய குடியிருப்பு பூமியில் அல்ல. நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் இருக்கிறது. அங்கேயிருந்து நம்முடைய அருமை இரட்சகர் வர ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறோம் (பிலி. 3:20). அவர் இருக்கிற இடத்திலே நாம் அனைவரும் இருக்கும்படி நம்மை சீக்கிரமாய் வந்து சேர்த்துக் கொள்ளுவார்.

அந்த நித்திய நம்பிக்கையே நமக்குள் எப்பொழுதும் மகிழ்ச்சியைத் தருகிறது. ஆகவேதான், அப். பவுல் எவ்வளவோ பாடுகளும், சோதனைகளும் வந்தபோதிலும் **"கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள், சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் உங்களுக்குச் சொல்லுகிறேன்"** என்று எழுதுகிறார் (பிலி.4:4).

சாதாரண மனுஷர் சோதனை நேரத்தில் மனம் உடைந்து போகிறார்கள், அதைரியப்படுகிறார்கள். ஆனால், பரலோகத்தின் மேல் தன்னுடைய கண்களை பதித்த தேவனுடைய

பிள்ளைகளுடைய வார்த்தைகள் என்ன? ''**துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாக எங்களை விளங்கப்பண்ணுகிறோம்**'' (2 கொரி. 6:10) என்று வெற்றி முழக்கமிடுகிறார்கள்.

இயேசு கிறிஸ்து சோதனையை சந்தோஷமாய் சகித்ததன் ரகசியத்தை அப். பவுல் எபி. 12:2ல் தெரியப்படுத்துகிறார். ''**அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு அவமானத்தை எண்ணாமல் சிலுவையை சகித்து தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்**'' (எபி. 12:2).

இயேசு சோதனையின் அகோரங்களைப் பார்க்கவில்லை. சிலுவையின் வேதனைகளைக் குறித்து எண்ணவில்லை. ஏனென்றால் அவருடைய கண்கள் அதற்கு அப்பால் இருக்கிற பெரிய சந்தோஷத்தை நோக்கிப் பார்த்தது. தேவ மகிமையை நோக்கிப் பார்த்தது. ஆகவேதான், அவர் அவமானத்தை எண்ணாமல் சிலுவையை சகித்தார்.

அந்த சந்தோஷம் என்ன? தான் அநேகம் பிள்ளைகளை மகிமையிலே கூட்டிச் சேர்க்கப்போகிற பெரிய சந்தோஷம் (எபி. 2:10). பிதாவினுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கப் போகிற பெரிய சந்தோஷம் (எபி. 12:2). அநேக ஜாதிகளை பங்காக எடுத்துக் கொள்ளுகிற சந்தோஷம் (ஏசா. 53:12). எல்லா நாமத்துக்கும் மேலான நாமத்தை சுதந்தரித்துக் கொள்ளப் போகிற சந்தோஷம் (பிலி. 2:11).

தேவனுடைய பிள்ளைகளே, உங்களுடைய கண்களும் பரலோக ராஜ்யத்தை நோக்கிப் பார்க்கட்டும். பூமிக்கு உரியவைகளை அல்ல, மேலானவைகளையே நாடட்டும். உன்னதத்திலே, உயர் ஸ்தலத்திலே அவரை முகமுகமாய்க் கண்டு அவரோடு உலாவுகிற பாக்கியங்கள், அவரைத் துதித்து ஆராதிக்கிற பாக்கியங்கள், உன்னதத்திற்குரிய சகல ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ளுகிற பாக்கியங்களை நோக்கிப் பார்க்கட்டும்.

''**ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்**'' என்று இயேசு கிறிஸ்து வாக்களித்திருக்கிறாரே (யோவான் 12:26).

பரலோக ராஜ்யத்திலே பிதாவானவர் நம்மைக் கனம் பண்ணும்போது அது எத்தனை மேன்மையாய் இருக்கும்! முழு பரலோகமும் களிகூர்ந்து மகிழும்போது கர்த்தர் உங்களை அன்போடு தட்டிக் கொடுத்து, "**நல்லது, உண்மையும், உத்தமமுமான ஊழியக்காரனே உன் எஜமானுடைய சந்தோஷத்தில் பிரவேசி**" என்று சொல்லுவார். எத்தனை மகிழ்ச்சி! எத்தனை சந்தோஷம்! இதற்கு ஈடான மேன்மை வேறு என்ன உண்டு?

இந்த உலக வாழ்க்கையிலே சோதனை இருக்கத்தான் செய்யும். உபத்திரவங்கள் வரத்தான் செய்யும். ஊழியத்திலே பாடுகளும், எதிர்ப்புகளும் இருக்கத்தான் செய்யும். ஆனாலும், இவ்வுலகில் நாம் பொறுமையோடு சகிக்கிற ஒவ்வொரு பாடுகளுக்கும் பரலோகில் பெறப்போகிற பலன் அதிக மேன்மையானது! மகிழ்ச்சியானது!

ஆதி திருச்சபையிலே பயங்கரமான உபத்திரவங்களும், பாடுகளும் வந்தன. கிறிஸ்தவர்களை கொலை செய்வதுதான் நாங்கள் தேவனுக்கு செய்யும் தொண்டு என்று வைராக்கியமான யூதர்கள் கருதினார்கள். ரோம அரசாங்கமும் கிறிஸ்தவர்களுக்கு விரோதமாய் மூர்க்கமாய் எழுந்தது. அந்த சோதனையில் அநேகர் இரத்த சாட்சிகளாய் ஜீவனைக் கொடுத்தனர். காரணம் அவர்கள் கண்கள் பரலோகத்தை நோக்கியிருக்கிறது.

இந்த சூழ்நிலையில் கர்த்தர் சிமிர்னா சபைக்கு எழுதும் போது, "**நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே. இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப் படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு; அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்**" *(வெளி 2:10)* என்று உரைத்தார்.

"பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள்" இந்த பத்து நாள் என்பது கொஞ்ச கால பாடுகளைக் குறிக்கின்றன. ஆம், நித்தியத்தில் நாம் வாழுகிற யுகா யுக காலத்தை பூமியில் வாழுகிற கொஞ்ச வருடங்களோடு ஒப்பிடும்போது அது பத்து

நாள் பாடாகவே தெரிகிறது. பெரிதல்ல, இந்த பத்து நாள் பாடுகள்! சீக்கிரமாய் அது மறைந்து போகும். இக்காலத்துப் பாடுகள் இனி நம்மில் வெளிப்படப்போகிற மகிமைக்கு ஒப் பிடத்தக்கவைகளல்ல.

ஆதி அப்போஸ்தலர் நாட்களிலே சீஷர்களும், விசுவாசி களும் சோதனை நேரங்களிலெல்லாம் பரலோக மகிமையை யேப் பார்த்தார்கள். கர்த்தருடைய வருகை வந்துவிட்டால் தங்க ளுடைய சோதனைக்கு முடிவு உண்டாகும் என்று உறுதியாக விசுவாசித்தார்கள். ஆகவே அவர்கள் ஒருவரை ஒருவர் சந்திக் கும்போது, ''கர்த்தர் வருகிறார். மாரநாதா'' என்று சொல்லி உற்சாகப்படுத்தினார்கள். ஆம் மாரநாதா என்பதற்கு இயேசு சீக்கிரம் வருகிறார் என்பது அர்த்தமாகும்.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே, உலகத்திலே நமக்கு உபத்திரவம் உண்டு. அம்புகளைப் போல குத்தக்கூடிய வார்த்தைகளை மற்றவர்கள் நம்மேல் எய்யக்கூடும். மனம் மடியச் செய்யக் கூடும். ஆனாலும், சோர்ந்து போகாதிருங்கள். உங்கள் கண்கள் உலகத்தை ஜெயித்த ராஜாதி ராஜாவை நோக்கிப் பார்க்கட்டும். பரலோகம் உங்களுக்கு தரப்போகிற விருந்து களை நோக்கிப் பார்க்கட்டும். ஒரு நாள் நாம் அனைவரும் அவருடைய சிங்காசனத்திற்கு முன்பாக நிற்கவேண்டும். அப்பொழுது கர்த்தர் நம்மை கனப் படுத்தி ஜீவ கிரீடம் சூட்டி மேன்மைப்படுத்துவார். அந்த மேன்மை எவ்வளவு பெரியதா யிருக்கும் என்று எண்ணிப் பாருங்கள்!

**''ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல''** (ரோம *8:18*). ஆகவே, கர்த்தரையும் அவருடைய வருகையையும், பரலோக ராஜ்யத்தை யும் நோக்கிப் பார்த்துக்கொண்டு உங்களுடைய ஓட்டத்தை வெற்றியோடு ஓடி ஜெயங்கொள்ளுவீர்களாக.

குழந்தையைப் பெற்றெடுக்கும் தாய் குழந்தையின் முகம் கண்ட உடனே அதுவரைத் தான் சகித்த கர்ப்ப வேதனையை மறந்துவிடுவாள். பரீட்சையிலே வெற்றி பெற்றவுடனே அந்த

மாணவன் பரீட்சைக்காக பாடுபட்டு படித்ததை மறந்து சந்தோஷத்தில் திளைத்துவிடுவான். அதுபோல நாம் பரலோகத்தில் பிரவேசிக்கும் போது பூமியிலே பட்ட பாடுகள் கடந்து வந்த சோதனைகள், அனுபவித்த கஷ்டங்கள் அனைத்தும் மறைந்துபோகும்.

நெப்போலியன் என்ற பிரசித்திப் பெற்ற சக்கரவர்த்தி தன் தளபதியை அழைத்து குறிப்பிட்ட பட்டணத்தை முற்றுகையிட்டு பிடித்து வரும்படி அனுப்பினான். தளபதி புறப்பட்டுப் போனான். யுத்தம் எளிதாய் இருக்கவில்லை. ஆனாலும் வீராவேஷத்தோடு போர் புரிந்தான். தன்னுடைய வீரர்களை எல்லாம் உற்சாகப்படுத்தி யுத்தத்தை முன் நின்று நடத்தினான்.

தளபதியே முன் சென்றதினால் வீரர்களும் தியாகமாக உயிரைப் பணயம் வைத்து யுத்தம் செய்தார்கள். அந்தோ அந்த தளபதியின் சரீரத்தில் ஏராளமான அம்புகள் தைத்தன. ஆனாலும், மன உறுதியை தளறவிடவில்லை. அந்த அம்புகளின் வேதனையை தாங்கிக்கொண்டு போரிட்டு யுத்தத்திலே ஜெயம் பெற்றார்.

அந்த ஜெயத்தின் செய்தியை சக்கரவர்த்திக்கு அறிவிப்ட தற்காக வேகமாக புறப்பட்டு வந்தார். சரீரமெல்லாம் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. மூச்சைப் பிடித்துக்கொண்டு மன உறுதியோடு ராஜாவின் பாதங்களிலே விழுந்து, ''ராஜாவே வென்றுவிட்டேன், வென்றுவிட்டேன்'' என்றார். அப்படியே அவருடைய ஜீவன் போயிற்று.

நாம் ஒரு நாள் ராஜாதி ராஜாவினுடைய பிரசன்னத்திற்கு போவோம். ஒருவேளை உடம்பெல்லாம் பூமியிலே வந்த சோதனைகளின் காரணமாய் ஏற்பட்ட தழும்புகளால் நிறைந்திருக்கக் கூடும். ''ஆண்டவரே உம் ஒத்தாசையால் சோதனைகளையெல்லாம் வென்றுவிட்டேன்'' என்போம். ராஜாதி ராஜா நம்மைத் தட்டிக்கொடுத்து நல்லது உத்தமமும் உண்மையுமான ஊழியக்காரனே என்று அழைப்பார். எஜமானின் சந்தோஷத்துக்குள் பிரவேசிப்பது எத்தனை மகிழ்ச்சி!

தேவபிள்ளைகளே, பூமிக்குரிய வாழ்க்கையும், ஊழியமும் போராட்டங்கள் நிறைந்ததுதான். பலவகையான பாடுகள் நிந்தனைகள் அவமானங்கள் மற்றவர்களுடைய கொடூரமான வார்த்தைகள் அம்பு போல நம் இருதயத்தைத் துளைக்கின்றன. ஆனாலும், நம்முடைய ஓட்டம் வெற்றியோடு முடியும். ஜீவ கிரீடம் சூட்டி பிதாவானவர் நம்மையும் கனம் பண்ணுவார்.

இதோ வானம் நமக்காய் திறக்கப்பட்டிருக்கிறது. பரலோக தேவன் அங்கிருந்து சந்தோஷத்தோடு நம்மைப் பார்க்கிறார். சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். ஆமென், அல்லேலூயா!

✤ ✤ ✤ ✤ ✤

## மனம் விட்டு உங்களோடே...!

இந்தப் புத்தகத்தின் மூலமாக உங்களைச் சந்திக்க கிருபை செய்த தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். கிருபையும் சமாதானமும் உங்களில் பெருகுவதாக.

"சோதனையில் அறிய வேண்டிய நான்கு சத்தியங்கள்" என்ற இந்தப் புத்தகத்தை வெளியிட நினைத்தபோது ஒரு அருமை சகோதரி இதை வெளியிடுகிற செலவை கொடுக்க மகிழ்ச்சியோடு முன் வந்தார்கள். அவர்களுடைய தியாகமான உதவியினால் இந்தப் புத்தகம் வெளியிடப்பட ஏதுவாயிற்று.

**Sis. Selvi Jemima Muses**
Pallavaram, Chennai-43.

இந்தப் புத்தகத்தால் வரும் ஒவ்வொரு ஆத்தும ஆதாயங்களும், ஆசீர்வாதங்களும் அவரையும், அவரது அருமைக் குடும்பத்தினரையும் சேருவதாக! கர்த்தர் சீயோனிலிருந்து அவர்களை ஆசீர்வதிப்பாராக.

**இந்தப் புத்தகத்திற்கு ஓய்வு தர வேண்டாம். குறைந்தது 50 பேருக்காவது வாசிக்கக் கொடுங்கள். நீங்கள் அனுப்பும் காணிக்கை புது புத்தகங்களை மலரச் செய்யும்!**

## ஆவிக்குரிய நூல்கள்

ஆவிக்குரிய ஜீவியத்தில் வளருவதற்கும், ஆத்துமா பெலன் கொள்வதற்கும் ஆவிக்குரிய நூல்கள் இன்றியமையாதவை.

ஏறக்குறைய 600க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதிய சகோ. J. சாம் ஜெபத்துரை அவர்கள் இந்நூலையும் வெளியிட்டிருக்கிறாகள்.

பதினாறு ஆண்டுகள் அரசாங்கத்தில் பணியாற்றிய அவர் தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு முழுநேர ஊழியத்தில் 1985 ஆம் ஆண்டு தீவிரமாக இறங்கினார். வல்லமையான மேடைப் பேச்சினாலும் எழுத்து ஊழியத்தினாலும் ஆயிரக்கணக்கானோரை அவர் கர்த்தருக்குள் வழி நடத்தியிருக்கிறார். இவர் கர்த்தரின் எழுத்தாணி.

புத்தக ஊழியத்தை ஊக்குவியுங்கள். அனேக ஆவிக்குரிய புத்தகங்கள் வெளிவர ஜெபியுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

புஸ்தகங்கள் கிடைக்கும் இடம் :

**J. சாம் ஜெபத்துரை M.A.,**

50, ரெயில்வே ஸ்டேஷன் ரோடு, கோடம்பாக்கம், சென்னை - 600 024.

